# இஸ்லாமியப் பண்பாடு

## (சம்பாதித்தல்)




ஆசிரியர்

மௌலானல்ஹாஜ் அல்லாமா பன்னூலாசியர்

மர்ஹூம்,

**S. S. முஹம்மது அப்துல் காதிர்**

ஸாஹிப் பாக்கவி [ரஹ்]

உத்தமபாளையம்.

இந்நூல் யாவரிடமும் பரவி மனித குலத்தை உய்விக்கச் செய்ய இறைவன் போதுமானவன். வஸ்ஸலாம்.

நன்றியுடன்,

மௌலவி S.M.முஹம்மது ஜாபர் ஜமாலி
உத்தம நூலகம்,
உத்தமபாளையம் - 626 533.

---

47. (சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கிற) ஹலால் விளக்கமாக இருக்கிறது (அதில் விலக்கப்பட்டிருக்கிற) ஹராமும் விளக்கமாக இருக்கிறது. இன்னும் இவ்விரண்டுக்குமிடையில் சந்தேகமானவைகளும் உள்ளன. அவைகளை மனிதரில் ஏராளமானவர்கள் அறியமாட்டார்கள். ஆகவே, சந்தேகமானவைகளைத் தவிர்த்துக் கொண்டவர் தன்னுடைய கௌரவத்தையும், தன்னுடைய மத பக்தியையும் காப்பாற்றிக் கொண்டார். மேலும், சந்தேகமானவைகளில் வீழ்ந்தவர் பாதுகாக்கப்பட்ட இடத்தைச் சுற்றிலும் (அரசருடைய சொந்தமேய்ச்சற்றரையில் மற்றவர் மேய்க்கக் கூடாது என்று பாதுகாக்கப்பட்டிருக்கிற இடத்தின் அண்டையில்) மேய்ப்பவரைப் போல் இருக்கிறார். அதில் வீழ்ந்து விடவும் கூடும். அறிந்துகொள்! நிச்சயமாக ஒவ்வொரு அரசனுக்கும் ஒரு பாதுகாவல் (தனி மேய்ச்சற்றரை) இருக்கிறது. அறிந்து கொள்! அல்லாஹ்வின் பாதுகாவல் என்பது அவனுடைய பூமியில் அவன் ஹராமாக்கியவைகள் தாம். அறிந்துகொள் நிச்சயமாக ஸ்தூலத்தில் ஒரு தசைக் கட்டி இருக்கிறது. அது இணக்கமாகி விட்டால் ஸ்தூலம் முழுதும் இணக்கமாகிவிடும் மேலும் அது கெட்டுவிட்டால் ஸ்தூலம் முழுதும் கெட்டுவிடும் அறிந்துகொள்! அது தான் இருதயம் என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூற நான் செவியேற்றேன்.

நூல் :- ஸஹீஹுல் புகாரி
ராவி ;- நுஃமானுப்னுபஷீர் (ரலி)

---

بسم الله الرحمن الرحيم

الحمد لله نحمده ونستعينه ونستغفره ونؤمن به ونتوكل عليه
ونعوذ بالله من شرور انفسنا ومن سيئات أعمالنا من يهده
الله فلا مضل له ومن يضلله فلا هادي له ونشهد أن لا إله
إلا الله وحده لا شريك له ونشهد أن سيدنا محمدا عبده ورسوله

# பேணுதல்

## ஹருமான உணவு

சகோதரர்களே! அனுமதிக்கப்பட்ட சம்பாத்தியத்தால் விலக்கப்பட்ட சம்பாத்தியத்தையும், அவனுக்குக் கீழ்படிவதால அவனுக்கு பாபம் செய்வதையும், அவனது கடாட்சத்தால அவனல்லாததையும் விட்டு எம்மையும் உங்களையும் அல்லாஹு தஆலா தேவையற்றவர்களாக, சீமான்களாக ஆக்குவானாக ஆமீன்.

விலக்கப்பட்டவை (ஹருமானவை) கலப்படமானவை (ஷிப்ஹாத்து) அனுமதிக்கப்பட்டவைகளை தேடிக் கொள்ளல், விலக்கப்பட்டதைத் தவிர்த்துக் கொள்வதுடன் அனுமதிக்கப்பட்டதை சம்பாதித்து புசித்தல் முதலியவை சன்மார்க்கத்தில் மிக முக்கியவைகளைச் சார்ந்தவை. அல்லாஹு தஆலாவை அண்மிக்கச் செய்யும் சாதனங்களில் மிகச் சிறந்தவைகளைச் சேர்ந்தவை. இதனைக் குறித்து

யா அய்யுஹன்னாஸு குலூ மிம்மா பில்அர்ழி ஹலாலன் தய்யிபன் வலா தத்தபிஉ குதுவாதிஷ் ஷைத்தானி இன்னஹு லகும் அதுவ்வும் மூபீன்.

மனிதர்களே, புவியிலுள்ளதிலிருந்து ஹலாலாகவும் மணமாகவும் புசியுங்கள். ஷைத்தானுடைய அடிச் சுவடுகளை நீங்கள் பின்பற்றுதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்க விரோதி ''என்றும்,

வகுலூ மிம்மா ரஜககுமுல்லாஹு ஹலாலன் தய்யிபன் வத்தக்குல்லாஹுல்லதீ அன்தும் பிஹி முஃமினூன்.

அலலாஹ் உங்களுக்களித்ததிலிருந்து ஹலாலாகவும் மணமாகவும் புசியுங்கள் இன்னும், நீங்கள் விசுவாசங் கொண்டிருக்கிற அல்லாஹ்வை அஞ்சுங்கள்'' என்றும்.

வயா அய்யுஹல்லதீன் ஆமனூ லா தஃகுலூ அம்வாலகும் பைனகும் பில்பாதிலி.

விசுவாசிகளே, உங்களுக்கிடையிலுள்ள பொருள்க-ளைத் தப்பான முறையில் புசிக்காதீர்கள்............என்று கூறியுள்ளான்.

கால ஸல்—அம் கைருகும் தீனுகுமுல் வறஉ.

உங்களுடைய நல்ல மார்க்கம் பேணுதல்தான் என்று றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்,

வகால ஸல்-அம் யா அபா ஹுரைரா குன் வரஅன் தகுன் அஃபுதுன்னாஸ.

அபூஹுறைருவே, பேணுதலுள்ளவராக நீர் இரும். மனிதரில் மிகவும் வணக்கஸ்தராக நீர் ஆகிவிடுவீர் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.



வகால ஸல்-அம் தலபுல் ஹலாலி வாஜிபுன் அலா-குல்லிமுஸ்லிமின்.

ஹலாலைச் சம்பாதிக்க முயல்வது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமை என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

வகால ஸல்-அம் தலபுல் ஹலாலி பரீழத்துன் பஅதல் பரீழத்தி.

ஹலாலைச்சம்பாதிக்க முயல்வது பர்ளுக்குப் பிறகுள்ள பர்ளு என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

(ஈமான் கொள்வது பர்ளு ஈமான் கொண்ட பின்னர் இஸ்லாமின் கடமைகளை நிறைவேற்றுவது பர்ளு இந்த பர்ளுகளுக்குப் பிறகு ஹலாலான அதாவது சன்மார்க்-கத்திற்கு விரோதமில்லாத முறையில் சம்பாதித்து உண்பதும் உடுத்துவதும் பர்ளு (கடமை) என்று கொள்க)

வகால ஸல்-அம் இன்னல்லாஹ தய்யிபுன் லா யக்பிலு இல்லா தய்யிபன். வஇன்னல்லாஹ அமரல் முஃமுனீன பிமா அமர பிஹில்முர்ஸலீன்.

அல்லாஹுதஆலா மணமானவன் மணமானதல்-லாததை அவன் அங்கீகரிக்க மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் முர்ஸல் (களான நபிமார்களுக்கு)

யா அய்யுஹர்ருஸுலு குலூ-மினத் தய்யிபாதி வஃமலூ ஸாலிஹன் இன்னீ பிமா தஃமலூன அலீம்.

றஸுல்மார்களே! நல்லவைகளை (மணமானவை-களை) புசியுங்கள். (சன்மார்க்கத்திற்கு) இணக்க-மானதை செய்யுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்கிறதை மிகவும் அறிகிறவன் என்று ஏவிவிட்டு அதனையே மூமின்-களுக்கும்

யா அய்யுஹல்லதீன ஆமனூ குலூ மின் தய்யிபாதி மா ரஜக்னாகும்,

விசுவாசங் கொண்டவர்களே. உங்களுக்கு நாம் அளித்த நல்லவைகளிலிருந்து புசியுங்கள் என்று ஏவி இருக்கிறான் என்பதாக அலைஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறிவிட்டு மனிதன் நீண்ட பிரயாணம் செய்து தூசு படிந்து வியர்வையுடன் வானின்பால் இரண்டு கரங்களையும் ஏந்தி, எனது றப்பே, எனது றப்பே எனது றப்பே என்று பிரார்த்திக்கிறான், அவனது உணவு ஹரும், அவனது குடிப்பு ஹராம், அவனது தீவனம் ஹ்ராம், அவனுக்கு எங்கே அங்கீகாரம் கிடைக்கப் போகிறது என அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

லா யத்குலுல் ஜன்னத லஹ்முன் னபத மின் ஸிஹ்தின்

ஹராமில் வளர்ந்த தசை சுவர்க்கத்தில் பிரவேசிக்காது என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

கால ஸல்-அம் குல்லு லஹ்மின் னபத மின் ஸிஹ்தின் பன்னாரு அவ்லா பிஹி

ஹராமில் முளைத்த தசை ஒவ்வொன்றும் (நரக) நெருப்புதான் அதற்கு மிக மேலானது என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

.வகால ஸல்-அம் லஅன் தஜ்அல பீக துராபன் கைருன் லக மின் அன் தஜ்அல பீஹி தஆமன் ஹராமன்.

உனது வாயினுள் ஹராமான உணவை நீ வைப்பதைப் பார்க்கினும் அதில் மண்ணை நீ வைப்பது உனக்கு நல்லது என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

கால ஸல்-அம் மன் இக்தஸப மாலன் மின் ஹைரி ஹில்லிஹி ப இன் தஸத்தக பிஹி லம் யக்பிலு மின்ஹு வஇன் அன்பக மின்ஹு லம் யுபாரிக் லஹு வஇன் தரகஹு கல்புன் கஸஜாதுஹு மினன்னாரி.

ஹலால் இல்லாத முறையில் ஒருவர் பொருளைச் சம்பாதித்து, அதனை அவர் தர்மம் செய்தால் அவரிலிருந்து அது அங்கீகரிக்கப்படமாட்டாது. அதிலிருந்து அவர் செலவு செய்தால் அதில் அவருக்கு பரக்கத் செய்யப்பட மாட்டாது. அவர் தனக்குப் பின்னர் விட்டுச் செல்வது அவருக்கு நரகத்திற்குரியகட்டமுதாகி விடும் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

வகால ஸல்அம் மன் இஷ்தரா தவ்பன் பிஅஷ்ர தராஹிமின் வபீஹி திர்ஹமுன் மின் ஹராமின் லம் யகபிலுல்லாஹு லஹு ஸலாதன் மாதாம அலைஹி.

ஒருவர் ஒரு துணியை பத்து திர்ஹம்கள் விலை கொடுத்து வாங்கினார். அதில் ஒரு திர்ஹம் ஹராமில் இருப்பின் அந்த துணியை அணிந்து அவர் நிறைவேற்றுகிற எந்தத் தொழுகையும் அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

(பத்திலொரு பங்கு விலை ஹராமான பணத்திலுள்ள துணிக்கு இந்த நிலையிலிருக்குமாயின். முழுத் தொகையுமே ஹராமான பணத்தில் வாங்கப்பட்ட துணியை அணிவதன் நிலை என்னாகும் என்பது சிந்திக்கத்தக்கவிஷயம். உடலுக்கு மேலில் அணிகிற துணியின் நிலை, உடலுக்குள் செல்கிற உணவு ஹராமானதாக இருப்பின் அந்த உடலினுள் ஒடுகிற உதிரம், உதிரத்திலிருந்து உற்பத்தியாகிற

இந்திரியம். அதிலிருந்து கிடைக்கிற உடல் வலிமை, மனவலிமை, அறிவு, பக்தி போன்றவை எப்படியாகும் என்பதை சிந்திக்க வேண்டும். குழந்தைகள் நற்குண நல்- -லொழுக்கம் மத பக்தி மதப் பண்பாடு, பெற்றோரைப் பேணல், உற்றார்-உறவினரை மதித்தல் போன்ற நற்காரி- யங்களைச் செய்யும் தன்மையினராக இருக்க வேண்டுமா- யின் ஹராமான உணவை பெற்றோர் அருந்தாமல் தங்கள் உடலில் ஆத்ம நோற்குரிய ஆத்மார்த்த விஷக் கிரிமிகள் பெருகா வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும். பிள்- -ளைகளுக்கு இவ்வுணவை ஊட்டவோ அருந்தச் செய்யவோ கூடாது என்பதை உணர்வாராக.

தனது உணவு எங்கிருந்து வருகிறது என்பதை கவனிக் காதவர் நரகில் எந்த தலைவாசல் வழியாகப் பிரவேசிப்பார் என்பதை அல்லாஹுதஆலாவும் கவனிக்க மாட்டான் என்று தவ்ராத் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (70)

ஹராமான பொருளை சன்மார்க்கக் காரியங்களில் செலவு செய்வதானது நஜீஸான துணியை சிறுநீரில் சலவை செய்வதற்கு ஒப்பாகும் என்று ஹஜ்றத் ஸுப்யா- னுத்தவ்ரீ றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி- னார்கள்.

ஹலாலான பொருளை அருந்துபவருக்கு அவருடைய அங்கங்கள் கீழ்ப்படியும். நன்மையான காரியங்களைச் செய்யும் வாய்ப்புகள் கிடைக்கும்.

''உனக்கு இஷ்டப் பட்டதை நீ புசிக்கலாம். அதற்குத் தக்கவாறுதான் உன் செயலிருக்கும்'' என்று முன்னோர் கள் கூறுவர். ஹராமானவைகளையும், ஹராமா ஹலாலா என்று சந்தேகமானவைகளையும் புசிப்பவர், நற்கிரியைகளை இப்புற உலகில் ஏராளமாகச் செய்த போதினும் அதனை மறு உலகில் இறைவன் ஏற்று நன்மைப் பயனை அளிக்க மாட்டான். ஏனெனில், அல்லாஹுத்தஆலா அங்கீகரிப்ப-



தெல்லாம் முத்தக்கீன்களுடையவைகளைத்தான் என்று செய்யிதுனா அப்துல்லாஹிப்னு அலவியினில் ஹத்தாத் றஹ்மத்துல்லாஹி அவர்கள் கூறினார்கள்.

வரத பில்ஹதீதிஸ்ஸஹீஹி மன் இத்தக்கஷ் ஷிப்ஹாத பகத் இஸ்தப்ரஅ லிதீனிஹி வஇர்ழிஹி வமன் வகஅ பில் ஹராம்.

சந்தேகமானவைகளைத் தவிர்த்துக் கொண்டவர் தன்னுடைய மத பக்தியையும் மானத்தையும் காப்பாற்றிக் கொண்டார். சந்தேகமானவைகளில் வீழ்ந்தவர் ஹரா- மில் விழுந்து விடுவார் என்று ஸஹீஹான ஹதீதில் வந்- திருக்கிறது.

வகால ஸல்-அம் தஃ மா யர்பீக இலா மா லா ய பீக.

உனக்கு சந்தேகமில்லாததைக் காப்பதற்காக உனக்கு சந்தேகமானதைச் செய்யாமல் விட்டுவிடு என்று அலை- ஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இது ஹலாலா ஹராமா என்று உணர முடியாமல் இரண்டுங்கெட்ட நிலைக்கு சந்தேகத்திற்குரியது என்று கூறுவர். இவ்வாறான சந்தேகம் உண்டாகுவதற்கு ஒன்- றுக்கொன்று முரண்பட்ட பலகாரணங்கள் இருக்கலாம், ஹலால் என்று நிச்சயமாகப் புரிந்த பின்னர் இது ஹராமா- கவும் இருக்கலாமோ என்ற எண்ணம் உண்டாகி குழப்பத்- திலாழ்த்துவது ஒருவகைச் சந்தேகம். இந்த சந்தேகத்- தைப் பொருட்படுத்தாமல் ஹலால் என்பதை ஊர்ஜிதப் படுத்தி அதன்படி செயலாற்றுவது சட்டப்படி ஆகுமானதே ஆயினும், இதனைக்கூட செய்யாமல் விட்டுவிடுவது பேணுதல், இது சிறப்பான செயல். ஹராம் என்று நிச்ச- யமான ஒரு காரியத்தை பல காரணங்களை முன்னிட்டு இதனைச் செய்வது ஆகுமானதே என்ற எண்ணமுண்டா-

கும். இதுவும் சந்தேகமானதுதான். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுவது வாஜிபு. இதனைத்தான் மேலே கண்ட ஹதீது குறிப்பிடுகிறது.

சந்தேகம் உண்டாகுவதற்கான காரணங்கள் ஏராளமாக இருக்கின்றன. எக்காரணத்தை முன்னிட்டு சந்தேகம் ஏற்பட்டாலும் அதனைச் செய்யாமல் விலகி விடுவதுதான் பேணுதல் அகாரணகாக ஐயம் என்னும் வஸ்வஸாவும் மனிதனுக்கு உண்டாகும். இதற்கு இடங் கொடுக்காமல் இதனை ஒதுக்கி விடவேண்டும். இக்காலத்திலுள்ள பொருள்களெல்லாம் சந்தேகமானவைதான். எந்தத் தொழிலில் பித்தலாட்டம் அயோக்கியத்தனம் இல்லாமலிருக்கிறது என்றுசிலர் கூறுவர். இவர்களது கூற்று நேர்மையானதல்ல. இக்காலத்தில் சுத்தமானது எது அசுத்தமாதது என்று பிரிக்கமுடியாதவாறு எல்லாம் குழம்பிக் கிடக்கின்றன. ஆதலால், எனக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன் எனக் கூறிசெயலாற்றுவது தவறு. அயோக்கியத்தனமும் பித்தலாட்டமும் இல்லாத காலமும் காரியமும், இல்லை. முற்காலத்திலும் இருந்தன. இக்காலத்திலும் இருக்கின்றன. எதிர்காலத்திலுங் கூட இவைகளை அடியுடன் ஒழித்து விடுவது சாலாது. ஆனால், அயோக்கியத்தனமும் பித்தலாட்டமும் சில காலத்தில் மலிந்திருக்கலாம் சில காலத்தில் அருகி இருக்கலாம். இதில் கூடுதல் குறைவு இருக்குமேயன்றி நூற்றுக்கு நூறு பித்தலாட்டமாகவும் அயோக்கியத்தனமாகவும் இருக்கமுடியாது. இதுபோல எல்லா காரியங்களும் நூற்றுக்கு நூறு யோக்கியமானவையாகவும் நேரானவையாகவும் இருக்க முடியாது. ஆதலால் நன்கு ஆராய்ந்து ஹலால் என்று தோன்றுவதைச் செய்ய வேண்டும் அதல்லாததைச் செய்யாமல் விட்டுவிட வேண்டும். இதுதான் நேர்மையும் பேணுதலுமாகும், இது சம்பந்தமாக விஸ்தாரமாக உணர்ந்து கொள்ள விரும்புவோர் இமாம் கஸ்ஸாலீ (றஹ்) அலைஹி அவர்கள் எழுதிய



இஹ்யாஉ உலூமுத்தீன் என்ற நூலில் கித்தாபுல்ஹலாலிவல்ஹறும் என்ற அத்தியாயத்தில் காண்க.

## ஹராம்(விலக்கப்பட்டவை)கள்

சோதரா! ஹராம் என்பது இரண்டு வகைஒன்று செத்த சவம், உதிரம், மது, புசிக்கக் கூடாது என்று விலக்கப் பட்டுள்ள பறவை, ஐவாய் மிருகம் புழு பூச்சிகள் முதலியவை. இவைகள் கூடாது என்று திருமறையும், ஹதீதும் தெளிவாக நேர்முகமாக கூறப்பட்டவை இவைகளுக்கு ஐன் ஹராம் என்று பெயர் இது முற்றிலும் ஹராம். இவைகள் தவிர வேறு எதுவும் கிடைப்பதற்கு வழி இல்லாத நிலை ஏற்பட்டு இவைகளைப் புசிக்காமல் இருந்தால் உயிர் பிரிந்து விடும் என்ற இக்கட்டான நிலைக்கு ஆளாகி விட்டால், அப்பொழுது உயிரைக் காப்பதற்கென்று தேவையான அளவு மட்டும் தேவையான காலம் வரையில் சாப்பிடலாம் இந்த ஒரு காரணத்தைத் தவிர்த்து வேறு எக்காரணத்தாலும் இவைகளில் கொஞ்சமோ கூடுதலோ எதுவும் அடியுடன் கூடாது. சில நண்பர்கள் உடல் வலிமை சுகாதாரம், டாக்டரின் ஆலோசனை என்று கூறிக் கொண்டு மது வகைகளையோ வேறு லாகிரி வஸ்துக்களையோ மாமிச வகைகளையோ புசிக்கின்றனர். இது சந்தேகத்திற்கு இடமில்லாத ஹராம். மனிதருக்கு இவைகளை உட்கொள்வதால் நன்மை இருக்கும் பட்சத்தில் இவைகளை அருந்த வேண்டாம் என்று இறைவன் தனது திருமறையாகிய குர்ஆன் ஷரீபில் கட்டளையிட்டிருக்க மாட்டான் உலகிலுள்ள எந்தப் பொருளிலும் நன்மை தீமை ஆகிய இரண்டும் கலந்தே தானிருக்கும் நன்மை இருக்கிறது என்பதை மட்டும் கவனித்துப் புசித்தால் அதிலுள்ள தீமை மனித உயிருக்கோ உடலுக்கோ கெடுதல் செய்வதை நிறுத்திக் கொள்ளாது தன்னுடைய தீமையை அது செய்தே தீரும். ஆதலால் நன்மையைக் கருதி ஒன்றைச் செய்வதற்கு முன்னர் அதில் உள்ள தீமையைக் கருதி அதனைச் செய்யாமல் விட்டுவிட வேண்டும் ஏன்பதுதான் ஷரீஅத்தின் கட்டளை.

இரண்டாவது வகை ஹராம்கள் இயற்கையில் ஹலாலான பொருள்கள்தாம். ஆனால் அது பிறரின் சொத்து, பிறருக்கு பாத்தியமுள்ளது, பிறரின் உடமை. இப்பொருளுக்கு உரியவரின் அனுமதியின்றி அல்லது ஷரீஅத்து அனுமதித்த முறையின்றி வேறு விதமாக அப்பொருளை அடைந்தால் அல்லது உபயோகித்தால் அது ஹராமாகி விடும். திருடியோ, கொள்ளையிட்டோ வழிப்பறி செய்தோ வட்டிக்குக் கொடுத்தோ, கஞ்சா அபின் சாராயம் பன்றி மாமிசம் உள்பட சகல விதமான ஹராமான பொருள்களை விற்பனை செய்தோ விலைக்கு வாங்கியோ பொருளீட்டினால் அப்பொருள்கள் அத்தனையும் ஹராம்தான். இதனை நேர்முகமாக இல்லாமல் மறைமுகமாகச் செய்தாலும் ஹராம்தான்.

ஒருவர் தன்னுடைய பொருள்களில் ஹராமான பொருளும் சேர்ந்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டே அதனைவேறு ஒருவருக்கு வெகுமதியாக அளிக்கிறார்என்றோ, நியாயமான முறைப்படி விற்பனை செய்கிறார் என்றோ வைத்துக் கொள்வோம், இப்படிச் செய்தாலுங்கூட ஹராமான அந்தப் பொருள் ஹலாலாகிவிடாது. உதாரணமாக ஒருவர் பல பொருள்களுடன் திருட்டுப் பொருள் ஒன்றையும் வேறு ஒருவருக்கு கிரையம் செய்கிறார். அவைகளை விலைக்கு வாங்கிய போதினும் திருடப்பட்ட போதினும் திருடப்பட்ட பொருள் திருட்டுப் பொருளாகவே இருக்கும் சர்க்காருக்குத் தெரிந்தால் திருட்டுப் பொருள் யாரிடமிருக்கிறதோ அவரைத்தான் திருட்டுக் குற்றத்திற்குட்படுத்தும். நியாயமான விலை கொடுத்து வாங்கியதாக அவர் ருஜூச் செய்த போதினும் திருட்டுப் பொருளை வாங்கியது குற்றம் என்றே நீதி மன்றம் தீர்ப்புச் செய்யும். அப்புறம் திருடியவரும் திருடப்பட்ட பொருளை விலைக்கு வாங்கியவரும் தண்டிக்கப்படுவர் புற உலக நீதிமன்றத்திலேயே திருட்டப்பட்ட பொருள்ளை விலை கொடுத்து வாங்கியவருக்கு அந்தப் பொருள் சொந்தமாக ஆகாதிருக்கையில் ஹராமான பொருளை விலை கொடுத்து வாங்கினாலும் அது ஹலா-



லாகிவிடாது. இதுபோல ஹலாலான பொருளை முறையில்லாத பேரத்தின் மூலம் விலைக்கு வாங்கினால் அது ஹராமாக மாறிவிடும்.

வர்த்தகம் செய்யும் விஷயத்தில் வியாபாரிகள் மூன்று வகையினராக இருக்கின்றனர். நேர்மையான வியாபாரி சத்தியவான். அயோக்கியத்தனம் செய்ய மாட்டார் என்பது யாவருக்கும் தெரிந்த (வியாபாரி) ஒருவர் இவரிடத்தில் கூசாமல் வியாபாரம் செய்யலாம். நேர்மையானவரா அயோக்கியமானவரா என்ற விபரம் தெரியாதவர் மற்றொருவர். இவரிடம் கூசாமல் வியாபாரம் செய்யலாம். என்றாலும், இவர் விற்பனை செய்யும் சரக்கைப் பற்றி விசாரித்துக் கொள்வது பேணுதலாகும். அயோக்கியர் நேர்மையில்லாதவர் என்று தெரிந்த வியாபாரியிடம் சரக்குகளை கொள்முதல் செய்தால் அதைக் குறித்து நன்கு விசாரித்துத் தெரிந்து கொண்டுதான் அவரிடம் கொள்முதல் செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட ஒருவர் ஆகாத பொருளை வைத்தே வியாபாரம் செய்கிறார் என்று நன்கு தெரிந்தால் அவரிடம் கொள்முதல் செய்யாமல் இருப்பது தான் பேணுதல், இது போல அவருடைய பெரும்பாலான பொருள் ஆகுமானது என்று தெரிந்தாலும் அவரிடம் கொள்முதல் செய்யாதிருந்து விடுவதுதான் பேணுதல் இதனை நம்மவர் கவனிக்க வேண்டும். ஆகுமான பொருளா? ஆகாதா பொருளா? என்று விசாரிப்பதுங்கூட அப்பொருளுக்குரியவரின் மனம் புண்படாதவாறு விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் மனிதன் ஊதாரித்தனமின்றி அளவோடு சிக்கனமாகச் செய்யப் பழகிக் கொண்டால் அவருக்கு தேவை அதிகமிருக்காது. குறைவான சம்பாத்தியமுள்ளவராகவும் சிக்கனமாக செலவு செய்து கௌரவமாக வாழ முடியும். ஊதாரித்தனமும், ஆடம்பரமும் உள்ளவர்களுக்கு செலவு அதிகமிருக்கும். தேவையும் பெருகும். இவ்வாறானவர்கள் செலவுக்கு தகுந்த வருவாயைத் தேடும் நோக்கத்தில் ஹராம்,

ஹலால், இரண்டும் சேர்ந்த கலப்படம், சந்தேகமானவை களா என்று ஆராயாமலும், பேணாமலும் யாவையும் செய்வர், இதுதான் மனிதனை ஹராமான சம்பாத்தியத்தில் தள்ளி விடுகிறது. இதனைக் குறித்தே இறைவன் தன் திருமறையில் இன்னல்லாஹ லா யுஹிப்புல்முஸ்ரிபீன் வீண் செலவுக்காரர்களை (ஊதாரித்தனமுள்ளவர்களை) அல்லாஹ் நேசிக்க மாட்டான் என்று கூறியுள்ளான். இவ் வாறானவர்கள் இறைவனின் திருப்திக்குரியவராக முடியாது. இக்காலத்திலுள்ள சில அறிவிலிகளும், மதப் பண்பாட்டை, மத பக்தியை பேணாதவர்களும் தங்களுடைய செயல் நியாயமானதுதான், சிக்கனமாக சம்பாதிப்பவர்கள் செட்டாக வாழ்பவர்கள் என்று தங்களை விளம்பரம் செய்வதற்காக தவறான குதர்க்கமான விளக்கங்களையும் புகல்களையும் கூறுவர், இது முற்றிலும் அஞ்ஞானமும், ஏற்றுக் கொள்ளாததுமாகும், ஆகவே பேணுதல், பத்தியமாக வாழ்தல் என்பது நான் சன்மார்க்க பக்திக்கு உறைகல், உறுதியான இறை நம்பிக்கையாளர்களின் வழிமுறை.

முற்காலத்தில் வாழ்ந்த ஒரு பெரியவர் மரணப்படுக்கையில் இருக்கிற ஒரு நோயாளியைப் பார்க்கச் சென்றார். அவர் அங்கிருக்கும் போதே அவரது ஆவி பிரிந்து விட்டது. அப்பொழுது அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விடுமாறு கட்டளையிட்டார். ஏன் அணைக்க வேண்டும் என வினவிய போது, இவர் மரிக்கும் வரையில் இவ்விளக்கும் மற்றவைகளும் இவருக்கு உரிய உடமைகள் இவர் மரித்தவுடன் இவரது உடலும், இவருக்குரிய விளக்கு உள்பட சகல சாமான்களும் இவருடைய வாரிசுகளுக்கு பாத்தியமாகி விட்டன. அவர்களின் அனுமதியின்றி இவைகளை உபயோகிக்க மற்றவர்களுக்கு உரிமையில்லை என்று உரைத்தார்.

ஹஜ்றத் அலி றலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கலிபாவாக இருந்தபோது ஒரு இரவில் அவர்களைச் சந்திக்க ஒருவர் வந்தார். அவர் வந்தவுடன் ஹஜ்றத்



அலி(றலி) அவர்கள் விளக்கை அணைத்து விட்டு அவரிடம் பேசினார்கள். விளக்கை அணைத்தற்கு காரணம் என்னவென்று வினவியபோது, இந்த விளக்கு அரசாங்க உடமை அரசாங்க அலுவல் பார்க்கும் போது தான் அதனை உபயோகிக்கலாம் உங்களுடன் நான் பேசுவது அரசாங்க அலுவலல்ல. ஆதலின், அதனை அணைத்து விட்டேன் என்று பதிலளித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. முற்காலத்து பெரியார்கள் பேணுதல் என்பதை தங்கள் மூலதனமாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய இம்மை விருப்பமாம இருந்தது இக்காலத்தில் நம்மவரிடத்தில் பேணுதல் மிகவும் குறைவு. தங்களை பக்கா மூமின் என்று பிறர் மதிக்க வேண்டுமென ஆசைப்படுகின்றனர். நம்மவரில் எவரேனும் மரித்தால் கத்தம் பாத்திஹா என்ற பெயரில் பதினாயிரக்கணக்கில் செலவு செய்கின்றனர். மரித்தவருடைய வாரிசுகளில் எத்தீம்களும் இருக்கின்றனர். இவர்கள் செலவு செய்யும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களில் எத்தீம்களின் பணமும் சேர்ந்திருக்கிறது. எத்தீம்களின் பணத்தை செலவு செய்ய எவருக்கும் உரிமை இல்லை. மார்க்கச் சட்டத்தை சரிவர புரிந்து கொள்ளாததின் பலன் தான் இந்த அலங்கோல நிலை. சகோதர முஸ்லிம்கள் நுட்பமான இவ்விபரங்களை நன்கு சிந்திப்பதுடன் ஸ்தல மத அறிஞர்களிடம் விளக்கங் கேட்டு செயல்படுவார்களாக.

ஹலாலான உணவை அருந்துவது இருதயத்தைப் பிரகாசிக்கச் செய்யும். அதிலுள்ள கடின சித்தத்தை அகற்றி மிருதுவாக ஆக்கும் தெய்வ பக்தியையும் தெய்வ பயத்தையும் உண்டுபண்ணும். வணக்கம் புரிய தஸ்பீஹு தஹ்லீல் ஓத உடல் வளைந்து கொடுக்கும். இப்பிரபஞ்ச மாயை குறையும் உலகாதயப் பற்று அகலும் மறுமைப் பேறுகளை அடைவதில் சிரத்தையுண்டாகும். இவை நற்கிரியைகள் அங்கீகரிக்கப்படுவதற்கும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் உரிய அடையாளங்கள். சுவர்க்கவாதி என்று பெருமானார் (ஸல்) அவர்களால் குறிப்பிடப் பட்ட பத்து பெரியார்களில் ஒருவரான ஹஜ்றத் ஸஃதுப்னு

அபீவக்காஸ் றலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நோக்கி ''உமது உணவை சுத்தமானதாக வைத்துக் கொள்ளும். உமது துஆ அங்கீகரிக்கப்படும்'' என்று றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டதாக ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது,

ஹராமான உணவை உட்கொள்வது இதற்கு நேர்மாறான பலனை அளிக்கும், கல்பு கறுத்து விடும், இரக்கச் சித்தம் எடுபட்டு விடும். வன்னெஞ்சராகி விடுவார். அநியாய அக்கிரமங்கள் புரிவார். தெய்வ வழிபாடு வணக்கம் தபம் ஜபம் செய்ய உடலுறுப்புகள் இடங்கொடா. உலகாதாயத்தில் பற்று மிகைக்கும் இவைகள் நற்கிரியைகள் அங்கீகரிக்கப்படாமலிருப்பதற்குகாரணங்களாகிவிடும். பேணுதல் என்பது உணவில் மட்டும் இல்லை. எல்லாக் காரியங்களிலும் பேணுதல் வேண்டும். ஆகவே, ஹலாலான முறையில் பொருளீட்ட முயலவேண்டும்; ஹலாலான முறையில் பொருளீட்ட வேண்டும் என்று உறுதி பூண்டு அதிலேயே ஸ்திரமாக இருப்பின் அதுவே 'பெரிய வணக்கமாகிவிடும். இதனைக் குறித்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்யபு மா அகலர்ரஜுலு மன் கஸப பியமீனிஹி தன் கரத்தால் சம்பாதித்து மனிதன் புசிப்பதுதான் மிகப் பரிசுத்தமானது'' என்றுரைத்திருக்கிறார்கள். தொழில் செய்பவரின் குறிக்கோள் தன்னுடைய மத ஆச்சாரத்தை, மதப் பண்பாட்டை காப்பாற்ற வேண்டும் தன் தேவையை நிறைவேற்றுவதற்காக பிறரிடம் கையேந்தலாகாது. தனக்கும் தன் குடும்பத்துக்கும் தேவையானதை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். தன் தேவைக்கு மேல் அதிகமாக இருப்பதை பற்றாக் குறையாக இருக்கிற அடியார்களுக்குக் கொடுத்துதவ வேண்டும் என்றிருக்க வேண்டும். இவ்வாறான சங்கல்பத்துடன்தொழில் செய்தால் இது மறுமைக்குரிய நற்கிரியைகளில் ஒன்றாகக் கணிக்கப்படும்.



தொழில் செய்வதால் தொழ நேரமில்லை. நோன்பு நோற்க இயலவில்லை என்று சாக்கு போக்குகளைக் கூறி அல்லாஹு தஆலா ஏற்படுத்திய கடமைகளை நிறைவேற்றாமல் இருக்கலாகாது. இவ்விஷயத்தில் முழு ஜாக்கிரதை வேண்டும். தொழில் வளர்ச்சிக்காக அல்லாஹு தஆலா விலக்கிய ஹராமான காரியங்களைச் செய்யலாகாது. மீறிச் செய்தால் இம்மை மறுமை இரண்டிலும் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியதிருக்கும், பணம் பெருகுவது பரக்கத் என்றும் பணம் குறைவது கஷ்ட காலம் என்றும் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறான எண்ணம். பணத்தைக் கொண்டு நல்லதையும் பொல்லாததையும் செய்ய முடியும், அதிகமாகச் சாப்பிடுவதால் நோய் நொடிகளை வருவித்துக் கொள்ள முடியும் பதவி ஆசையை உண்டாக்கிவிடும். தனக்கு மற்றவர் பணிய வேண்டும் மரியாதை வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கும். கர்வங் கொள்ளச் செய்யும் இவை எல்லாம் பணத்தால் வரும் ஆத்மார்த்த அபாயங்கள். இவைகளை அண்டவிடாமல் துரத்தி நல்ல காரியங்களைச் செய்தால், ஏழை எளியாருக்கும் மெலிந்தோருக்கு வறியோருக்கும் உதவினால், பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்தால் பணம் பரக்கத்துதான். இல்லையேல் பணத்தால் ஆத்மார்த்த துன்பங்களே விளையும்.

நீர் தொழில் செய்து சம்பாதிப்பவராக இருந்தால் உமது தொழிலில் உமக்கு திட நம்பிக்கையும் உறுதியும் இருக்க வேண்டும். ஜனங்கள் பால் நல்லெண்ணம் இருக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல சரக்கை நியாயமான விலைக்குக் கொடுத்து உபகாரம் செய்ய வேண்டும் ஏன்ற உபகார உள்ளம் இருக்க வேண்டும். வபில் ஹதீதி இன்னல்லாஹ யுஹிப்புர் முஃமினில் முஹ்தரிபி தொழில் செய்து சம்பாதிக்கிற மூமினை அல்லாஹ் நேசிக்கிறான் என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நேர்மையாக தொழில் செய்து இறைவனின் நேசத்தைப் பெற்றுக் கொள்வாராக.

மனிதர் மூவகையினராக இருக்கின்றனர். இம்மையைப் பற்றிச் சிந்திக்காமல் மறுமையைப் பற்றிய காரியங்களில் ஈடுபடுபவார்கள். இந்த உலகம் மறுமைக்குரிய விளை நிலம் என்று ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருப்பதற்கேற்ப மறுமையில் வெற்றி பெறுவதற்காக இவ்வுலக ஜீவியத்தை பயன்படுத்திக் கொள்பவர்கள் இவர்கள்தாம். இவர்கள் முதலாவதுவகையினர். அடுத்து இவ்வுலக காரியங்களைச் செய்வாராயினும் மறுமையில் வெற்றி பெறவேண்டுமே என்ற எண்ணத்தில் தப்புத் தண்டா செய்யாமல் தங்கள் அலுவல்களில் நேர்மையைக் கடைப் பிடிப்பர் இவர்கள் நடுத்தரமானவர்கள். மறுமையை மறந்து பொய்யான வாழ்வை நிலையற்ற ஜீவியத்தை மெய்யென நம்பி செயல்படுகின்றனர். இவர்கள் இவ்வுலகை சதம் என்று நம்பி செயல்படுவதால் மறு உலகில் எந்த நன்மையையும் அடைய மாட்டார்கள். இவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்ட புல்லர். இவர்கள் மூன்றாம் வகையினர். மனிதன் மெய்யாகவே மனிதனாக இருக்க வேண்டுமாயின் இம்மூவகையில் முதலாவது வகையில் இருக்க வேண்டும். இவ்வகையில் சேருவது எல்லோருக்கும் சாத்தியமில்லை. ஆதலால், குறைந்த பட்சம் இரண்டாவது வகையிலாவது சேரவேண்டும். மூன்றாவது வகையில் சேருவது மனிதப் பண்பல்ல மிருகப் பண்பாகும். இதைச் சேர்ந்தவர்கள் மறுமையில் சிரமமடைவர்.

வர்த்தகம், கைத்தொழில் முதலியவைகளைச் செய்பவர்கள் பொய்யுரைத்தல் மோசடி செய்தல், வாக்குறுதிக்கு மாறு செய்தல் முதலியவைகளை அடியுடன் விட்டு விட வேண்டும். கொள்முதல் செய்தல் விற்பனை செய்தல் போன்றவைகளில் ஹராமான வியாபாரம் மக்ரூஹான வியாபாரம், செல்லாத வியாபாரம் ஆகியவைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான வியாபாரங்கள் யாவை என்பதை நீ நன்கு புரிந்து கொள்வது உன் கடமை. வியாபாரச் சட்டம் தெரியாதவர்கள நமது கடைத் தெருவில் வியாபாரம் செய்யலாகாது என்று ஹஜ்றத உமர்



ாறுக் (றலியல்லாஹு தஆலா அன்ஹு) தங்களுடைய கிலாபத் ஆட்சியின் பொழுது தடையுத்தரவு பிறப்பித்திருந்தார்கள். இஸ்லாமிய வர்த்தகச் சட்டத்தை தெரிந்து அதன்படி நடக்காதவர்கள் தங்களை அறியாமலேயே வட்டி வாங்கிவிடுவர்,

உன்னுடைய வியாபாரத் தொழிலில் உபகாரம், நீதி, விட்டுக் கொடுத்தால் க்ஷமித்தல், உலோபத்தனமின்மை ஆகியவைகளிருக்க வேண்டும். இத்தன்மைகள் பரக்கத்தை வளர்ப்பன. இன்ன விலைக்கு வாங்கினேன், இன்ன விலைக்கு விற்றேன். இன்ன விலைக்கு நான் வாங்க மாட்டேன் என்று உண்மையல்லாத சொல்லைக் கூறாதே. இப்படிக் கூறினால் லாபத்திற்கு பதில் நஷ்டம் தானுண்டாகும். விற்பதிலும் விலைக்கு வாங்குவதிலும் அல்லாஹ்வின் மீது பிரமானஞ் செய்யலாகாது. இந்த உலகம் முழுவதுமே மிக அற்பமானது. இதற்காக பிரமாணம் செய்யவே கூடாது. அதிலும் இதற்காக பொய்ப் பிரமாணஞ் செய்வது பெரும் விபரீதத்தையே விளைவிக்கும். வரதபில் ஹதீதி இன்னல்லாஹ யப்கலுல் பய்யாஉல் ஹல்லாப் சத்தியம் செய்கிற வியாபாரியை அல்லாஹ் கோபிக்கிறான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. அல்யமீனு மஙபகது லிஸ்ஸல்அதி மம்ஹகது லில்பரகத்தி வல்கஸபீ. சத்தியம்செய்வது சரக்கை செலவாக்கிவிடும் பரக்கத்தையும் தொழிலையும் அழித்து விடும் என மற்றொரு ஹதீதில் வந்திருக்கிறது. வகால ஸல்-அம் அத்திஜாரு யஹ்ஷரூன யவ்மல் கியாமதி புஜ்ஜாரன் இல்லா மன் இத்தகா வபிர்ர வஸத்தக்க. தக்வா என்னும் பயபக்தியைக் கடைப்பிடித்தவர் நேர்மையாக இருந்தவர் உண்மையுரைத்தவர் ஆகிய வியாபாரிகளைத் தவிர்த்து மற்றைய வியாபாரிகள் இறுதி நாளில் பாஜிர்களாக எழுப்பப்படுவர் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்,

உணவுப் பொருள் விற்பனை செய்து கொண்டிருக்கிற ஒரு வியாபாரியினண்டையிற் சென்றார்கள், உணவு தானியத்தினுள் தங்கள் கையை நுழைவித்தார்கள். அடிபாகத்தில் ஈரம் இருப்பதைக் கண்டு வியாபாரியே இது என்ன என்று வினவினார்கள். மழை பெய்து நனைந்து விட்டதென்று அவ்வியாபாரி பதிலளித்தார். அதனை ஜனங்கள் பார்க்கும் விதமாக பகிரங்கமாக வைக்கக் கூடாதா? எவர் மோசடி செய்கிறாரோ அவர் நம்மைச் சேர்ந்தவரல்லர் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறி அவருடைய அச்செயலைக் கண்டித்தார்கள்,

உணவுப் பொருளுக்கடியில் மட்டரகமான உணவுப் பொருள் இருப்பதை பெருமானார் (ஸல்) அவர்கள் பார்த்து மட்டச்சரக்கையும் நல்ல சரக்கையும் வெவ்வேறாக வைக்கக் கூடாதா? முஸ்லிம்களுக்கு மோசடி செய்பவர் நம்மைச் சேர்ந்தவரல்லர் என்று கூறிக் கண்டித்ததாகவும் மற்றொரு ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது,

பொருளை விற்றவரும் அதனை வாங்கியவரும் பேரம் நடைபெற்ற அந்த ஸ்தலத்தை விட்டகலுவதற்கு முன்னர் அவர்கள் செய்து முடித்த பேரத்தை ஊர்ஜிதம் செய்யவும் ரத்துச் செய்யவும் உரிமை பெற்றிருக்கின்றனர். அந்த ஸ்தலத்தை விட்டகன்ற பின்னர் அவர்களுக்கு அந்த உரிமை இல்லை. விற்பவரும் வாங்குபவரும் உண்மை பேசி, விற்கப்பட்ட பொருளிலுள்ள குற்றங் குறைகளை விபரித்து பேரத்தை பூர்த்தி செய்வார்களாயின் அவர்களுடைய அந்த பேரத்தில் இருவருக்கும் பரக்கத்துச் செய்யப்படும். அவ்விருவரும் பொய்யுரைத்து விற்பனைச் சரக்கிலுள்ள குறைகளை மறைத்து சரக்கை விற்பனை செய்தால் அந்த விற்பனையிலுள்ள பரக்கத் அழிக்கப்பட்டுவிடும் என்ற விபரம் ஹதீது ஷரீபில் சொல்லப்பட்டிருக்கிறது.

விற்கப்படுகிற சரக்கில் குறை இருந்தால், அக்குறையைக் காட்டித்தான் விற்பனை செய்ய வேண்டும். சரக்குக்குரியவர் குறையைச் சொல்லாதிருந்தால், அக்குறையை



அறிந்த வேறு ஒருவர் அச்சமயத்தில் அங்கிருப்பின் அவர் அதனைக் கூறுவது வாஜிபு, இப்படிக் கூறுவது கடமை என்பதாக ஹதீதில் கூறப்பட்டிருக்கிறது.

வியாபாரி தனது றப்பை ஒவ்வொரு காரியத்திலும் அஞ்ச வேண்டும். முக்கியமாக அளவிலும் நிறுவையிலும் மிகப் பேண வேண்டும். இதில் தவறு ஏற்பட்டால் இம்மை மறுமை இரண்டிலுமே பெருங் கஷ்டங்கள் ஏற்படும். ஜனங்களிடத்தில் அளந்து வாங்கும் போது பூர்த்தியாக வாங்குகின்றனர். அவர்களுக்கு அளந்து கொடுக்கும் போது அல்லது நிறுத்துக் கொடுக்கும் போது குறைக்கின்றனர். இப்படிச் செய்வோருக்கு வைல் என்னும் நரக ஓடைதான் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது கால ஸல்-அ அத்திஜாரு அன்ளகும் வல்லைது அரனா ஹலகத் பீஹில் உமவுஸ்ஸாபிகதுல் மிக்யாலி வல்மீஜானி.

நீங்கள் ஒரு காரியத்தை மேற்கொண்டிருக்கிறீர்கள். முற்காலத்து வர்க்கங்கள் அதில் அழிந்திருக்கின்றன. அவை அளவையும் நிறுவையும் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் வியாபாரிகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஆதலின், வியாபாரிகள் நீதியாக நடந்து கொள்ள வேண்டும். கொள்முதல் செய்வதிலும் விற்பனை செய்வதிலும் ஒரே சீரான அளவையையும் நிறுவையையும் கடைப்பிடிக்க வேண்டும். இதில் பேணுதல் இருக்க வேண்டும் கொள்முதல் செய்யும் போது அளவை நிறுவைகளில் கொஞ்சம் குறைத்து வாங்க வேண்டும், விற்பனை செய்கையில் அளவை நிறுவைகளில் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வது பேணுதல். இந்த வழக்கத்தை கையாளுவது சிறந்தது. முற்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம் பெரியார்கள் இந்த வழக்கத்தை கடைப்பிடித்தனர்.

ஸஹாபிகளில் முஹாஜிர்களாக இருந்தவர்களிற் பெரும்பாலர் குறிப்பாக மக்காவாசிகள் யாவரும் வியாபாரிகள். இமாம் அபூஹனீபா (றஹ்) ஹஜ்றத் முஹிய்யத்தீன் அப்துல் காதிரில் ஜீலானி (றஹ்) முஹிய்யத்தீனுப்னுல் அறபிய்யி (றஹ்) போன்றவர்களெல்லோரும் வர்த்தகம் செய்து கொண்டிருந்தனர். ஸஹாபிகளில் அன்ஸார்களாக இருந்தவர்களில் பெரும்பாலர் விவசாயிகள். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தும். வேளாண்மை செய்து விளைவித்தும் தங்களுக்குத் தேவையானது போக எஞ்சியதை வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் விற்பனை செய்தவர்கள் தாம். எத்தனையோ ஸஹாபிகளும் தாபியீன்களும் தபஉ தாபியீன்களும், இமாம்களும் கைத் தொழில்களைச் செய்து நாட்டுக்கும் சமூகத்துக்கும் தேவையான பொருள்களை பண்டங்களை உற்பத்தி செய்து உதவியவர்கள் தாம். இவர்கள் எல்லோரும் குர்ஆன் ஹதீதுகளில் வியாபாரம் கைத் தொழில் விவசாயம் சம்பந்தமாக கூறப்பட்டிருக்கிற கட்டளைகளை காட்டப்பட்டிருக்கிற வழிமுறைகளைக் கடைப்பிடித்து பெரும் செல்வந்தர்கள் வர்த்தக பிரமுகர்களாக கைத் தொழில் வல்லுனர்களாக விவசாய மன்னர்களாக திகழ்ந்தார்கள். இவர்களின் வாழ்க்கை சரித்திரங்களைப் படித்தால் இவர்கள் லட்சமாக கோடி-கோடியாக சம்பாதித்து பெரும்-பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்ததை உணர முடியும் இக்காலத்திலுள்ளவர்களில் பெரும் பாலருக்கு மத அறிவில்லை. மார்க்கச் சட்டம் புரிவதில்லை. மத பக்தி குறைவு. இதன் பயனாக பொய்யையும் புழுகுகளையும் கூறுகின்றனர். கொள்முதல். விற்பனை ஆகிய இரண்டிலும் பொய்யுரைக்கின்றனர். அளவை நிறுவைகளில் கூட்டிக் குறைத்து பொய் சத்தியமுஞ் செய்கின்றனர். விலக்கப்பட்ட சாமான்களை கொள்முதல் செய்து விற்கின்றனர். இக்காலத்தில் பொய்யுரைக்காமல் உண்மை கூறினால் லாபம் சம்பாதிக்க இயலாது என்றெல்லாம் கூறுகின்றனர் பெரும்பாலான வியாபாரிகள் ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றுவதில்லை. சிலர்



வாரத்தில் ஒரு முறையான ஜும்ஆவைக்கூட நிறைவேற்ற மாட்டார்கள். அல்லாஹுதஆலா பர்லாக ஏற்படுத்திய இத்தொழுகைகளை விட்டுவிட்டு இரண்டு பெருநாள் தொழுகைகளை நிறைவேற்றுவதில் முன்னணியிலிருப்பர். இவைகளையும்கூட நிறைவேற்றாதவர்களும் கூட ஊருக்கு ஒருவர் இருவர் இருப்பர். தொழுகை விஷயத்தில் இப்படி அலக்ஷியமாக இருப்பவர் றமலான் மாதத்தில் நோன்பு நோற்பார்கள் என்பதை எதிர்பார்க்கவே முடியாது. பெரும்பாலான கடை முதலாளிகள் தங்களிடம் வேலை செய்கிறபிள்ளைகளிடம்வேலைவாங்குவதிலேயேகண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர். அவர்களின் ஒழுக்கம் எப்படி இருக்கிறது. இஸ்லாமிய பண்பாட்டில் இருக்கிறார்களா? என்பன போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துவது இல்லை. நாம் சம்பளம் கொடுக்கிறோம், அவர்களிடம் வேலை வாங்குவதுதான் நமது பொறுப்பு, ஒழுக்கம், பண்பாடு என்பதெல்லாம் அவரவருடைய சொந்தக் காரியம். அதில் நாம் தலையிட நமக்கு உரிமை இல்லை. இக்காலத்தினுடைய பையன்களிடம் இவைகளைக் குறித்து வினவினால். நீங்கள் கொடுக்கிற சம்பளத்துக்கு வேலையை வாங்கிக் கொள்ளுங்கள். அப்புறமுள்ள காரியங்களில் தலையிட உங்களுக்கு உரிமை இல்லை. அவை எனது சொந்தக் காரியங்கள். நான் சுதந்திரவான் என்று கூறுவர். ஆதலால் நமக்கு ஏன் இந்த வம்பு, நம்மை நாம் பார்த்துக் கொள்வோம் என்று பெரும்பாலான வியாபாரிகள், தொழிலதிபர்கள், விவசாயிகள் கூறுகின்றனர். **குல்லுகும் ராஇன் வகுல்லுகும் மஸ்ஊலுன் அன் ரஇய்யதிஹி** உங்களில் ஒவ்வொருவரும் தலைவர் ஒவ்வொருவரும் அவரவரின் கீழுள்ளவர்களைக் குறித்து வினவப்படுவர்'' என்று இருலோக நாதர் ஸெய்யிதுல் அன்பியா, காத்தமுன்னபிய்யீன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உலக மன்பதைகளுக்குக் கூறி அவரவர் பொறுப்பைக் குறித்து எச்சரிக்கை செய்திருப்பதை இவர்கள் கடைப்பிடிப்பதில்லை. சில முதலாளிமார்கள் தங்கள் சிப்பந்திகள்

தொழுகை நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றினால் முணுமுணுக்கின்றனர். சிலர் கோபமடைகின்றனர், சிலர் போலிக்காரணங்களைக் கூறி வேலைக்கு வேண்டாம் என்று நீக்கி விடுகின்றனர். பொதுப்பட பெரும்பாலான முதலாளிமார்களும், தொழிலாளர்களும் கடைச் சிப்பந்திகளும் தலையில் தொப்பி போடுவதில்லை தலைப் பாகை அணிவதில்லை, கிராப் வைத்துக் கொள்கின்றனர், தாடி மீசைகளை மழுங்க சிறைத்துக் கொள்கின்றனர். உடையிலுங்கூட மாறுதல்களைச் செய்கின்றனர். பார்வைக்கு முஸ்லிம்களாக தெரிவதில்லை. முன் அறிமுகமில்லாதவர்கள் பார்த்தால் முஸ்லிம் அல்லாதார் என்றே கருதுவர். இவ்வாறெல்லாம் வேஷம் போடுவதற்குக் காரணம் என்னவென்றால் இஸ்லாமிய ஆசாரங்களை நாங்கள் வெறுக்கவில்லை. ஆசாரத்தைக் கைவிடலாகாது என்பதை நாங்களும் உணர்ந்தே இருக்கிறோம். என்ன செய்வது? நாங்கள் எடுத்துக் கொண்ட தொழிலுக்கு இப்படி எல்லாம் இருக்க வேண்டியதிருக்கிறது. முகம் நிறம்ப தாடி மீசை வைத்துக் கொண்டிருந்தால் எங்களிடம் யார் வந்து சாமான் வாங்குவார்? என்றெல்லாம் கூறுகின்றனர், இக்காலத்தில் இஸ்லாமிய அரசாங்கம் இல்லாததால் அரசாங்கச் சட்டத்தின் மூலம் இதற்கு பதில்கூற வாய்ப்பில்லை. ஸ்தலத்திலுள்ள ஆலிம்கள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதுடன் தங்கள் காலக்ஷேபத்திற்கு இவர்களின் தயவை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். ஆதலால். இவர்களின் உபதேசங்களை செவிமடுப்பதற்கில்லை. வெளியிடங்களிலிருந்து வருகிற மதோபதேசிகளின் நிலையும் கிட்டத்தட்ட இதே நிலைதான். ஆகவே, இவ்வியாபாரிகள் கூறுவதை மறுத்துப் பேசவோ தட்டிக் கேட்கவோ ஆளில்லை. சமர்த்தாகப் பேசிவிட்டோம், ஆலிம்களின் வாயை அடைத்து விட்டோம் என்று இவர்கள் எண்ணிக் கொள்கின்றனர் இவர்களின் செயலுக்கும் சொல்லுக்கும் வருகிற பயன் என்னவென்பதை இவர்கள் உணராமல் இருக்கின்றனர்.



இந்தியாவில் சீக்கியர் என்று ஒரு சமூகத்தார் இருக்கிறார்கள். அரசாங்க உத்தியோகங்களிலும் வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் இவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். எந்த நிலையிலும் இவர்கள் தாடியையும் தலைப்பாகையையும் இழப்பதில்லை. இவர்கள் கடைகளில் வியாபாரம் நடைபெறவில்லையா? இவர்களுக்கு அரசாங்க உத்தியோகப் பதவி கிடைக்கவில்லையா? இராணுவத்தில் இவர்கள் சேர்க்கப்படவில்லையா? இவர்களில் இலட்சாதிபதிகள் இல்லையா? இவர்களின் தாடியினாலும் தலைப்பாகையினாலும் இவர்கள் பொதுமக்களால் அவமதிக்கப்படுகின்றனரா? என்பதை இவர்கள் சிந்தித்தால் வியாபாரத்தில் பொய்யுரைப்பதையும் புரட்டுச் செய்வதையும் தொழுகை நோன்பு போன்ற கடமைகளில் அலட்சிய போக்கை கடைப்பிடிப்பதிலும், தாடி தலைப்பாகை இல்லாதிருப்பதற்கு நியாயம் கூறுவதிலும் கடுகு பிரமாண அளவிற்காவது உண்மை இருக்கிறதா? என்பதை உணரமுடியும், சீக்கியர்கள் தங்கள் மதாசாரத்தை கைவிடாதிருப்பதால் உலக மக்களால் மதிக்கப்படுகின்றனர், நம்பப்படுகின்றனர். மதத்திற்கு தெய்வத்திற்கு துரோகம் செய்யவில்லை. மனிதருக்கும் துரோகம் செய்யமாட்டார்கள் என்று பொதுவாக கருதப்படுகின்றனர். முஸ்லிம்களில் பெரும்பாலர் அவ்வாறில்லாததால் மதாசாரத்தைப் பேணாததால் தெய்வக் கட்டளைகளை அலட்சியப்படுத்தியதால் உலக மக்களால் உதாசீனப்படுத்தப்படுகின்றனர். இதனால் அரசியலில் மதிப்பிழந்தனர். வர்த்தகம் கைத் தொழில் முதலியவைகளில் நாணயமிழந்து பின் தள்ளப்படுகின்றனர். இந்நிலையை முஸ்லிம் பொதுமக்கள் உணர வேண்டும். இது இம்மையிலுள்ள நிலை மறுமையில் இவர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதற்கு இவ்வுலகிலேயே சான்றாகும் முஸ்லிம் சமூகம் சிந்திக்குமா? திருந்துமா?

## கடன்பட்டோர்

வியாபாரிகள் கொள்முதல் செய்வதிலும் விற்பனை செய்வதிலும் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதும் சகஜம் பிறரிடம் கடன் வாங்காமலும் பிறருக்கு கடன் கொடுக்காமலும் இருப்பது ஒருவகையில் சிறப்பான காரியம் தான். பொருளாதார சிக்கலும் மனக் கவலையும் இதனால் குறையும் இவ்வாறு செய்வது தனம் படைத்தவர்களுக்கும் ஏராளமான மூலதனமுள்ளவர்களுக்குத்தான் சாத்தியம் எல்லோராலும் இது சாத்தியமில்லை. பெரும்பாலான வியாபாரிகள் கடன் வாங்கியவராகவும் கடன் கொடுத்தவராகவுமேஇருப்பர். ஆகவே, வாங்கிய கடனை குறித்த தவணைப்படி குறைவின்றிக் கொடுப்பதுதான் நாணயத்தைக் காப்பாற்றுவதற்கு சிறந்த வழி. இது ஒவ்வொரு வியாபாரிக்கும் இன்றியமையாத சிறந்த அம்சம். இது போல் தங்களிடம் நிலுவைக்கு சரக்கு கொடுத்து வாங்குவதும் அவசியம் இவ்வாறு நிலுவை வாங்குவோர் பலர் நாணயமாக நடப்பர். சிலர் நாணயமில்லாதவர்களாகவும் இருப்பர் நாணயமின்றி ஏமாற்ற முயல்வோரிடம் நிலுவைகளை கண்டிப்பான முறையில் வசூல் செய்வது குற்றமோ ஆட்சேபிக்கத்தக்கதோ இல்லை ஆனால். நாணயஸ்தர்களிலும் சில சமயங்களில் வசூலாகாமல் தாமதம் ஏற்படக் கூடும். உண்மையாக அவர்களுக்கு பொருளாதாரக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்தால் அவர்களை நெருக்கடி செய்யாமல் இயன்ற வரையில் தாமதித்திருந்து வசூல் செய்வதுதான் மனிதத் தன்மை இதனைக் குறித்து **வ இன் கான தூ உஸ்ரதின் பநழிரத் இலா மைஸரா** கஷ்டமுள்ளவர் இருந்தால் (அவருக்கு) வசதி வரும் வரையில் காத்திருக்க வேண்டும் என்று இறைவன் தன் திருமறையில் கூறியுள்ளான். **கால ஸல்-அம் மன் அகால நாதிமன் பைஅததன் அகாலல்லாஹு அத்ரத்ஹு யவ்மல் கியாமதி.** எவர் வெட்கப்படுகிற கடன்காரருக்கு அவருடைய நிலுவையை விட்டுக் கொடுக்-



கிறாரோ அவருடைய குற்றத்தை இறுதி நாளில் அல்லாஹ் விட்டுக் கொடுப்பான் என்று திருநபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**கால ஸல்-அம் குல்லு கர்ழின் ஸதகதுன்.**

ஒவ்வொரு கடனும் தர்மமே என்று ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

**வகால ஸல்-அம் ரஅய்து லைலத அஸ்ரா பிஅலா பாபில் ஜன்னதிஸ் ஸதக்கதி அஷ்ரதன் அம்தாலுஹா வல்கர்ழு பிதமானியத்து அஷர**

நான் மிஃராஜுச் சென்ற இரவில் சுவர்க்கத்து தலைவாசலில் ஒரு தர்மத்துக்கு பத்து மடங்கு நன்மை, ஒரு கடனுக்கு பதினெட்டு மடங்கு நன்மை என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

யாசகம் வாங்கப் பிரியப்படாதவர்கள் கடன் வாங்குகிறார்கள். கடன் வாங்கிய பின்னர் குறித்த தவணைப்படி கடனைக் கொடுத்துத் தீர்க்க முடியாவிடில், அவருக்கு வசதி வரும் வரையில் காத்திருந்து கடனை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது கடனை வஜா செய்து விட வேண்டும். கடன் வாங்கியவர் கடனை திரும்பக் கொடுக்க இயலாமல் சிரமப்படும் போது அவரைத் தொந்தரவு செய்வதும் அவருடைய சொத்துக்களை வம்பு செய்து எழுதி-வாங்கிக் கொண்டு, இன்னும் அதிகமாகச் சிரமப்படும்படி செய்வதும் இஸ்லாமியப் பண்பாடல்ல. ஸதக்கா என்னும் தர்மம் கொடுப்பது நன்மையான காரியம்தான். குறைந்த பட்சம் அதற்கு ஒன்றுக்கு பத்து வீதம் நன்மை இருக்கிறது. எனினும், தர்மம் வாங்குபவர் மென்மேலும் தர்மம் வாங்கி தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஆர்வத்தை உண்டாக்கும் அபாயம் இருக்கிறது. தர்மம் வாங்குவதை தொழிலாகக் கொள்வது இஸ்லாமிய பண்பாடல்ல. கடன் வாங்குபவர் யாசகம் வாங்கப் பிரியப்படாமல் கடன் கேட்-

கிறார். இஸ்லாமிய பண்பாட்டிற்கு விரோதமான யாசகத் தொழில் செய்யப் பிரியப்படாதவருக்கு கடன் கொடுத்து உதவுவது இஸ்லாமிய சகோதர வாஞ்சையைப் பெருக்கவும் உதவுவதால் கடன் கொடுத்து உதவி செய்வதுடன் கடன் வாங்கியவர் சுபிட்சம் அடையும் வரையில் காத்திருந்து சாவதானமாகப் பெற்றுக் கொள்வது ஒன்றுக்கு பதினெட்டு மடங்கு நன்மைப் பயன் இருக்கிறது என்று மேலே கண்ட ஹதீதிலிருந்து தெரிய வருகிறது. வேறு பல ஹதீதுகளில் தர்மம் செய்பவருக்கு கிடைக்கிற நன்மையைப் பார்க்கினும் இரண்டு மடங்கு நன்மை கடன் கொடுத்து உதவுபவருக்கு இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது.

## போட்டி போட்டு விலை கேட்குதல்

ஒரு சரக்கை விலை பேசி முடித்த பிறகு விலைக்கு வாங்கியவரிடம் சென்று அதே மாதிரி சரக்கை மலிவான விலைக்கு நான் தருகிறேன் என்று கூறி விலை பேசி முடித்த பேரத்தைக் கெடுக்கலாகாது. இதுபோலவே அதே மாதிரியான சரக்குகளுக்கு இன்னும் விலை அதிகமாக இருக்கிறது குறைந்த விலைக்கு சரக்கை விற்க வேண்டாம் என்று விற்று முடித்த பேரத்திற்கு இடைஞ்சல் செய்யலாகாது. இது போல ஒரு பெண்ணை ஒருவருக்கு விவாகம் செய்வதாக நிச்சயம் செய்த பின்னர் அந்தப் பெண்ணை வேறு ஒருவருக்கு விவாகம் செய்விக்க அல்லது அந்த பெண்ணை விவாகம் செய்ய இருக்கிற மாப்பிள்ளைக்கு வேறு ஒரு பெண்ணை விவாகம் செய்விக்க முயலலாகாது இவை இஸ்லாமிய பண்பாட்டுக்கு விரோதமான பாபச் செயல்கள் என்பது மட்டுமின்றி சகோதரர்களாக வாழ்கிற முஸ்லிம் சமூகத்திற்குள் பகையையும் துவேஷத்தையும் மாச்சரியத்தையும் உண்டுபண்ணுகிற செய்கைகள். ஒரு சரக்கை ஒருவர் விலை பேசிக் கொண்டிருக்கிற போது அந்த சரக்கு விலையை அதிகப் படுத்தும் நோக்கத்துடன் அதனை வாங்கும் நோக்கம் இல்லாமல் வெறுமனே அதிக விலைக்குக் கேட்கலாகாது.



## உணவுப் பொருட்களை பதுக்குதல்

நாட்டில் உணவுப் பொருளுக்கு பஞ்சமாக இருக்கிற நிலையில் கொள்ளை லாபம் அடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைக்கக் கூடாது. இதற்கு இஷ்திகார் என்று பெயர். இது மனித வர்க்கத்தை கஷ்டத்திற்குட்படுத்தி தனது சொந்தநிலையை உயர்த்தும் முயற்சியாகும். இது கொழுத்த ஹராம் இப்படிச் செய்வதால் பயங்கரமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு இதனைக் குறித்து

**வகால ஸல் - அம் மன் இஹ்தகர தஆமன் அர்பஈன யவ்மன் தும்ம தஸத்தக பிஹி லம் யகுன் லஹு கப்பாரதுன்.** நாற்பது நாட்கள் வரையில் உணவுப் பொருளைப் பதுக்கி வைத்துவிட்டு அப்புறம் அதனை தர்மஞ் செய்தால் அது (பதுக்கிய பாபத்திற்கு) பரிகாரமாகாது என்று ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள். **அல்ஜாலிபுமர் ஜுகூன் வல்முஹ்தகிரு மல்ஊனுன்** (பஞ்ச காலத்தில் உணவுப் பொருள்களை வெளியிடத்திலிருந்து விற்பனைக்காக) கொண்டு வருபவர் சம்பத்தளிக்கப்படுவார், பதுக்குபவர் சபிக்கப்படுவார் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**இன்னல் ஹாகிரீன வகத்லத்துன் னுபூஸி யஹ்ஷுருன யவ்மல் கியாமதி மஅன்**

பதுக்கல்காரர்களும், உயிர்களைக் கொல்வோரும் மறுமை நாளில் ஒன்றாக எழுப்பப்படுவர் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உணவுப் பொருள்கள் விளைந்து அறுவடை செய்யுங் காலத்தில் அவைகளை விலைக்கு வாங்கி, உணவுத் தட்டு சமயத்தில் கூடுதலான விலைக்கு விற்கலாம் என்ற எண்ணத்

தில் சேமித்து வைத்தல், தனக்கும் தன் குடும்பத்திற்கும் ஏற்படும் தேவைக்கு மேல் அதிகமாக இருப்பதை உணவுத் தட்டு வரும் போது அதிக விலைக்கு விற்கலாம் என்ற எண்ணத்தில் சேமித்து வைத்தல் ஆகியவை பதுக்கல் என்ற இனத்தில் சேரா. என்றாலும், பொதுமக்களிடம் அதிக விலைக்கு விற்க வேண்டும் என்ற எண்ணம் தவறான தாகையால் அது மக்றூஹு (வெறுக்கத் தக்க செயலாகும். பதுக்கல் ஹராமாக இருப்பது போல் ஹராமல்ல) மனிதத் தன்மைக்கும் மாறான செயலாகும். உணவுத் தட்டு வரும் போது பொதுமக்களுக்கு கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் உணவுப் பொருளை பாதுகாத்து வைப்பது மக்றூஹல்ல. விலை ஏறவேண்டும் என்று ஆசைப்படாமல் இருந்தால் மக்றூஹுமல்லி.

## வட்டித் தொழில்

இது பெரும் பாதகமானதும் பாபமான செயலுமாகும். இதனைக் குறித்து '**யா அய்யுஹல்லதீன ஆமனுத்தக்குல்லாஹ வதரு மா பகிய மினர்ரிபா இன் குன்தும் முஃமினீன் பஇன் லம்தஃப்அலூ பஃதனூ பிஹர்பிம் மினல்லாஹி வரசூலிஹி**' விசுவாசிகளே! அல்லாஹ்வை ''நீங்கள் அஞ்சுங்கள் (மெய்யான) விசுவாசிகளாக இருப்பின் வட்டியில் (இதற்கு முன்னர் வசூல் செய்ததையல்லாமல் (இப்பொழுது எஞ்சி இருப்பதை) வசூல் செய்யாமல் விட்டுவிடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாவிடில் அல்லாஹ்விடத்திலும் அவனது ரஸூலிடத்திலும் போருக்கு அறிக்கை செய்யுங்கள்'' என்று அல்லாஹுதஆலா தனது திருமறையில் கூறியுள்ளான்.

பணம் உள்ளவர்கள் ஏழைகளிடத்திலோ பணத்தேவையுள்ளவரிடத்திலோ பணத்தைக் கொடுத்து உடலுழைப்பு இல்லாமல் பணம் வாங்கியவர்களை மட்டும் உழைக்கச் செய்து, அவர்களின் உழைப்பின் பலனை தாங்கள் அனுபவிப்பதாக இருக்கிறது வட்டித் தொழில். வட்டித் தொழில்



புரிகிற இவர்கள் உதிரத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சிகளுக்குச் சமமானவர்கள், இந்த விதத்தில் பொருளைப் பெருக்குவோருக்கு தர்ம சிந்தை நாளுக்கு நாள் குறையும் லோபத்தனம் நாளுக்கு நாள் பெருகும். நல்ல காரியங்களைச் செய்வதில் உற்சாகமிருக்காது. மனிதன் தனது மறுமைக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செய்ய இயலாவிடினும், குறைந்த பட்சம் பிறருக்குத் தீங்கு செய்யாமலாவது இருக்க வேண்டும். வட்டித் தொழில் பிறர் செய்யும் உடலுழைப்பின் பலனைக் கவர்ந்து கொள்வதாக இருப்பதால் அது பிறருக்கு இடையூறு செய்யும் பணியாக இருக்கிறது. இதனைச் செய்பவர் இறைவன் கருணையை திருப்பொருத்தத்தை அடைய இயலாது. வட்டித் தொழில் செய்வோரை நோக்கி இறைவன் மேற்கண்ட ஆயத்தில் முதலாவதாக சலுகையளித்து வட்டி சம்மந்தமான கட்டளை வருவதற்கு முன்னர் வசூல் செய்தவைகளைக் குறித்து எதுவும் கூறாமல் வட்டித் தொழிலை இனிமேல் செய்யலாகாது என்று கட்டளையிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. உழைப்பாளிகள் தங்கள் உழைப்பின் ஊதியத்தை அடைய விடாமல் பணம் படைத்தவர்கள் அதனை அடைவது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை உணர வேண்டும். இதனைக் குறித்த விசாரணையுண்டு, அதில் இத்தொழில் செய்வோர் பதில் கூறி தப்பித்துக் கொள்ள முடியாது. ஆதலால், இவ்வாறான குற்றங்கள் புரியும் விஷயத்தில் இறைவனை பயப்பட வேண்டும் என்று உபதேசம் செய்து விட்டு, கடந்த காலத்தில் நிகழ்ந்ததை மன்னித்து விட்டு, இக்கட்டளை வந்த தேதியிலிருந்து இத்தொழிலை நிறுத்தி விடுமாறு கட்டளையிட்டது கொடுத்த முதலை மட்டும் திரும்ப வாங்கிக் கொண்டு, அதற்கு சேர வேண்டிய வட்டித் தொகையை தள்ளுபடி செய்து விடுமாறு கட்டளையிட்டுள்ளான். இக்கட்டளைக்குப் பணியாமல் மீறி மீண்டும் வட்டித் தொழிலில் ஈடுபட்டால் அல்லாஹுதஆலாவையும், அவனது ரசூலையும் எதிர்த்து போர் செய்ய தயாராகிக் கொள்ளுமாறு இறுதி எச்சரிக்கைசெய்துள்ளான். அல்லாஹுதஆலா திருமறையில்

பிறப்பித்துள்ள கட்டளைகளில் வட்டித் தொழில் சம்மந்தமாக எச்சரிக்கை செய்தது போல அவ்வளவு கடுமையான எச்சரிக்கை வேறெந்தக் கட்டளைக்கும் பிறப்பிக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

திருமறையில் கூறப்பட்ட கட்டளைகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம். ஒன்று அல்லாஹுதஆலாவுக்கும் தன் அடியானுக்கும் சம்மந்தப்பட்டவை. இவைகளை நிறைவேற்றினால் லாபம் அடைவது அடியானேதான். இதனைச் செய்வதாலும் செய்யாமல் விடுவதாலும் அல்லாஹ்விற்கு லாபமோ நஷ்டமோ இல்லை. இவை தெய்வ வணக்கம் சம்மந்தப்பட்டவை. மற்றொன்று மனிதருக்கும் அவனது உற்றார் உறவினருக்கும் சம்மந்தப்பட்டவை. இவைகளை நிறைவேற்றினால் குடும்பம் சுபிட்சமாகவும் அந்நியோன்யமாகவும் இருக்கும். நிறைவேற்றாவிடில் குடும்பத்திற்குள் பிணக்கு, பகை, பூசல் முதலியவை ஏற்படும், இதன் பிரதிபலனை கைமேல் உடனடியாக பெற்றுக் கொள்ளலாம். மூன்றாவது மனிதனும் அவனுடைய மனித வர்க்கத்தைச் சேர்ந்த மற்றைய மனிதருக்குமுள்ளவை. இவைகளைச் செய்தால் உலகில் அமைதி, சமாதானம், சாந்தி பெருகும் தொழில் வளம் பெருகும் நாடு செழிக்கும். இவைகளை செய்யாவிடில் இதற்கு நேர்மாறான பலனேற்படும். இவைகளில் வட்டித் தொழில் பிறரைச் சுரண்டுவதும் பிறர் உதிரத்தை உறிஞ்சுவதுமாகும். இதனால் மனித வர்க்கத்தில் ஒரு பகுதியினர் பொருளாதார விஷயத்தில் பெரும் பாதகத்தை அடைவர். இதன் எதிர் ஒலி மிகக் கடுமையாக இருக்கும்.

மேனாட்டினர் பொருள் வசதி படைத்ததால் ஏழை நாடுகளுக்கு உதவி என்ற திட்டத்தின் அடிப்படையில் வட்டிக்கு கடன் கொடுக்கின்றனர், இவ்வுதவியின் மறைவில் ஏழை நாடுகளிடம் சலுகைகள் பெற்று தொழில்களை அமைத்து நாட்டு செல்வ வளத்தை தங்கள் நாட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர். இவ்வாறு தொழிற்சாலைகள்



அமைப்பதால் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பை அளித்து உபகாரம் செய்வதாக கூறிக் கொள்கின்றனர். இதனையல்லாமல் தனி நபர்களின் கூட்டுறவில் பங்குகளை அமைத்து நாடெங்குமுள்ள ஏழை மக்களைச் சுரண்டுகின்றனர். இதன் பலன் உலகில் பொதுவுடமை இயக்கம் பரவி அநேக அரசாங்கங்கள் கவிழ்ந்ததும் அரச குடும்பங்கள் அழிந்ததும், உலகம், முதலாளித்துவ நாடுகள் ஜன, நாயக நாடுகள் என்று இரண்டாகப் பிரிந்து இயங்குவதும் தான். இது எதில் கொண்டு போய் விடும் என்பதை யார் அறிவர். O இதனையல்லாமல் இத்தொழிலைப் புரியும் தனி நபர்களை மனிதர் மதிப்பதில்லை. அவர்கள்பால் அபிமானங் கொள்வதில்லை. வெளித் தோற்றத்தில் பொருள் திரளுவதாக தோன்றலாம். இறுதியில் அந்தப் பணம் நல்ல காரியத்திற்குதவுவதில்லை, துன் மார்க்கம் பெருக உதவுகிறது. வட்டித் தொழில் புரிவோரின் குடும்பத்தில் நோய் நொடி, தெய்வ பக்தியின்மை, ஒழுக்க வழுக்கு அநாச்சாரங்கள் மலிந்து ஒதுக்கப்பட்ட குடும்பமாகி விடுகிறது. இவைகளையல்லாமல் அந்த செல்வம் நீண்ட நாள் நிலைக்காமல் சடுதியில் சரிந்து விடுகிறது. அக்குடும்பத்தைப் பற்றிக் கொண்ட புற நோய்களும் அகநோய்களும் நீண்ட காலம் வரையில் அகலுவதில்லை. இதனை நாம் சிந்தித்து திருந்துவோமாக.

**லஅன ஸல்-அம் ஆகிலுர்ரிபா வமுவ்கிலுஹு வஷாஹிதுஹு வகாதிபுஹு**

---

O இந்நூல் 1969-ம் ஆண்டு எழுதப்பட்டது. தற்போது. நாடுகளுக்கிடையில் "காட்" எனும் ஒப்பந்த மேற்பட்டு கையெழுத்தாகியுள்ளது. சில நாடுகளில் இதற்கு எதிர்ப்பும் தோன்றியுள்ளது மெக்ஸிகோ போன்ற நாடு திவாலாகி விட்டதாகவும் பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன.

(பதிப்பாசிரியர்)

வட்டிக்கு பணங்கொடுத்து ஜீவனம் செய்பவர். இவருக்கு ஏஜண்டாக இருப்பவர். இவருக்கு சாட்சியாக இருப்பவர் இவருக்கு கணக்கு வேலை பார்ப்பவர் ஆகியவர்களை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்கள் சபித்திருக்கிறார்கள்.

**கால ஸல் -அம் அர்பஅதுன் ஹக்குன் அலைஹி அன் லா யத்குலுஹுமுல் ஜன்னத வலா யதீகுஹும்நஈமுஹு மத்மினுல்கம்றவ அகலுர்ரிபா வஅகலு மாலல் யதீம பிஙைகரில் ஹக்கி வல்ஆகு லிவாலிதைஹி.**

நால்வர் : அவர்களை சுவர்க்கத்தில் பிரவேசிக்காமல் இருக்கவும் அதன் பாக்கியங்களை ருசிக்காமல் இருக்கவும் கடமையாகி விட்டது. நிரந்தரமாக மது அருந்துபவர், வட்டியில் வயிறு வளர்ப்பவர், அநாதையின் பொருளை அநியாயமாக அருந்துபவர், தன் பெற்றோரை நோவினை செய்பவர் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

வட்டித் தொழில் பற்றி திருகுர்ஆனிலும் ஹதீதிலும் சொல்லப்பட்டிருப்பவைகளில் இரண்டொன்றை மட்டிலும் தான் இங்கு சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. விரிவான நூல்களில் ஏராளமாக எழுதப்பட்டிருக்கின்றன. சுருங்கக் கூறிடின் உலகிலுள்ள போராட்டங்களுக்கும் நாடுகளுக்கிடையிலுள்ள பிணக்குகளுக்கு அடிப்படையான காரணம் பெரும்பாலும் வட்டித் தொழில்தான். இதன் மூலம் நாட்டுச் செல்வம் குறிப்பிட்ட சிலரிடம் குவிந்து விடுகிறது. அவர்கள் தங்கள் இஷ்டம் போல் நாட்டையும் நாட்டு மக்களையும் ஆட்டி வைக்கின்றனர். உலகில் அமைதி சமாதானம் நிலவ வேண்டுமாயின் செல்வம் யாவரிடமும் பரவலாக இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால்தான்



தொழில் வளம் பெருகும் வறுமை ஒழியும் O பண்பாடு சிறக்கும் என்பதை நாம் உணர வேண்டும். நம்மிலுள்ளவர்களில் பலருக்கு மத அறிவு போதிய அளவில் இல்லை. இதனால் மத பக்தியும் பண்பாடும் குன்றி விட்டன. இந்நிலையை அகற்ற ஒவ்வொருவரும் அவரவரால் இயன்ற முயற்சியை மதக் கோட்பாட்டுக்குள் மனப்பூர்வமாக செய்ய வேண்டும். றஹ்மான் நம்மவருக்கு நல்லுதவி புரிவானாக ஆமீன்

---

O 1995ம் ஆண்டு மார்ச் திங்கள் 7ம் நாள் டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் உலகிலுள்ள 183நாடுகளின் பிரதமர்கள்,' ஜனாதிபகளின் மாநாடுநடந்தது மாநாட்டின் நோக்கம்:-வறுமை ஒழிப்பு,வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது கல்வியறிவு இல்லாமையை ஒழிப்பது வறுமையினால் ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்று கலந்து கொள்ள இயலவில்லை. உலகில் வாழும் 560கோடி மனிதர்களில் 112கோடி மனிதர்கள் வறுமையில் உள்ளனர் 100கோடி மனிதர்களுக்கு குடியிருக்க வீடில்லை 55 கோடி மனிதர்கள் வறுமையின் காரணமாக இரவு சாப்பிடுவதில்லை இம்மாநாட்டில் நமது பாரதப் பிரதமர் திருபி.வி,நரசிம்மராவ் அவர்கள்கலந்து கொண்டு ஏழுநிமிடம் உரையாற்றினார்கள் அவர்கள் உரையாற்றும் போது நூறு நாட்டுத் தலைவர்கள் அவையில் இருந்தனர். அவர்களின் உரையின் ஒரு பகுதி:- வறுமையும் துன்பமும் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் சரி சர்வதேச அமைதிக்கு அதனால் அச்சுறுத்தல் ஏற்படும். மாற்றாரை எப்படிக் கொல்வது அவற்றிலிருந்து எப்படித் தப்பிப்பது என்பது பற்றியே சதாசிந்தித்துக் கொண்டிருந்த நாம் இப்போதுதான் எப்படி வாழ்வது என யோசிக்கத் தொடங்கியுள்ளோம். பொருளாதார வளர்ச்சி சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வை உருவாக்கும் போதுதான் சமூக அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறது. இந்த ஏற்றத் தாழ்வு தாங்க முடியாத கட்டத்தை அடையும் போதுதான் பிளவுகளும், மோதல்களும் ஏற்படுகின்றன. (பதிப்பாசிரியர்)

இக்காலத்திலுள்ள நம்மவரிற் சிலர் வட்டிக்குப் பணம் கொடுப்பதை நேர்முகமாகச் செய்தால் பொதுமக்களால் கண்ணியமாக மதிக்கப்பட மாட்டோம், மத பக்தர்கள் வெறுப்படைவர் என்று எண்ணிக் கொண்டு ''வட்டி'' என்ற வார்த்தையை உச்சரிக்காமல், உபயோகப்படுத்தாமல் பல்வேறு பெயர்களாலும் யுக்திகளாலும் வட்டித் தொழிலைப் புரிகின்றனர். முற்காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேலர்கள பலவிதமான யுக்திகளால் இறைவன் கட்டளைகளுக்கு மாறாக நடந்தனர். தங்களுடைய செய்கையை புனராலோசனை செய்ய அல்லாஹு தஆலா அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கினான். அவர்களுடைய தந்திரங்களுக்கும் யுக்திகளுக்கும் தக்க தண்டனையை உடனுக்குடன் செய்யாமல் கொஞ்ச காலம் விட்டு வைத்தான். அப்புறம் அவர்களுக்கு விதம் விதமான தண்டனைகளை அனுப்பி, அவர்களனைவரையும் பூண்டோடு அழித்தான், இச்சம்பவங்கள் இன்றும் நம்மெதிரில் இருக்கின்றன, இவைகளை யுணர்ந்தும் நாம் தவறான முறையிலும். அக்கிரமமாகவும் பிறர் பொருளைக் கவரும் பணியிலேயே இருப்பின் அவர்களுக்கு வந்த வேதனை நமக்கும் வர கால தாமதம் ஏற்படாது. ஆகவே, வட்டித் தொழில், மோசடி, வஞ்சகம், ஏமாற்று, பொய்ச்சத்தியம், பொய் சாட்சி, லஞ்சம்O போன்ற தகாத முறைகளில் பொருளீட்டுவதைக் கைவிட்டு நியாயமான முறையில் சம்பாதித்துண்ண முயல்வோமாக. இதனைக் குறித்து இறைவன் தனது திருமறையில்.

---

O ஆசியா முழுவதும் ஊழல்தான்; ஆனால் இந்தியவில் அதிகம். இவ்வாறு கூறியிருப்பவர் அனுபவமுள்ளபொறியாளர் ஒருவர் எங்கே தெரியுமா? ஹாங்காங்கிலிருந்து வெளிவரும் **''சவுத் சீனா மார்னிங் போஸ்ட்''** எனும் பத்திரிக்கையில் கட்டுரையாக வரைந்திருக்கிறார், பணம் கொடுத்தால் சீனாவைவிட சீக்கிரத்தில் காரியம் சாதித்துத் தருகிறார்கள் என்றும் நமது இந்தியாவின் கீர்த்தியை குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பதிப்பாசிரியர்.



**யா அய்யுஹல்லதீன ஆமனூ லா தஃகுலூ அம்வாலகும் பைனகும் பில்பாதிலி.**

''விசுவாசிகளே! உங்களுக்கிடையிலுள்ள முதல்களை தவறான முறையில் புசிக்காதீர்கள்'' என்று தடை செய்துள்ளான். இத்தடை யுத்தரவை மதித்து நேர்மையாக நடந்து கொள்வோமாக ஆமீன்.

## தர்மமும் யாசகமும்

தர்மம் கொடுக்குமாறு அல்லாஹு தஆலா கட்டளையிட்டுள்ளான். தர்மம் தலைகாக்கும் என்பது தமிழ் முதுமொழி. தர்மம் செய்வது சிறந்த பண்புகளில் ஒன்று, முஸ்லிம்களில் இது பரவலாக எல்லோரிடத்திலும் அவரவர் சக்திக்குத் தக்கவாறு கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கிறது. என்றாலும் சில பேராசைக்காரர்களாலும் உடலுழைப்புச் செய்யச் சோம்புபவர்களாலும் தர்மங்கள் சரியான இடத்திற்குச் செல்லாமல் தடைபடுகின்றன.

தர்மம் தகுதியுள்ளவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதை உத்தேசித்து பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்களைக் குறித்து.

**கால ஸல்-அம் லா தஹில்லுல் மஸ்அலதி லிகனிய்யின் வலா லிதீ மஜ்ஜதீன்**

யாசகம் செய்வது சீமானுக்கும், தக்க சக்தியுள்ளவருக்கும் ஹலால் இல்லை என்று றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறிஇருக்கிறார்கள். யாசகம் வாங்குவது ஹலாலாக இல்லாத சீமான் யார்? என்று பெருமானார் (ஸல்) அலைஹிவஸல்லம் அவர்கள் வினவப்பட்டார்கள். ஒருநாள் சாப்பாட்டிற்கு தேவையான அளவுள்ளவர் என்று பதிலளித்தார்கள். ஆதலின், ஒரு நாள் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாதவர் பிறரிடம் கையேந்தலாம். அதற்கு மேலதிகமாக இருப்பவர் கையேந்துவது கூடாது என்பது இந்த ஹதீதிலிருந்து தெரிகிறது,

### காலஸல்-அம் லிஅன் யஃகுது அஹதுகும் ஹீபலதன் பயம்ததிபு ரைகருல் லஹீ மின் அன் யஸ்அலன்னாஸ அஃதூரஹு அவ் மனஉஹு

உங்களில் ஒருவர் தம்முடைய கயிற்றை எடுத்துக் கொண்டு விறகு கொண்டு வந்து விற்று ஜீவனம் செய்வது அவர் ஜனங்களிடத்தில் யாசகம் கேட்பதைப் பார்க்கினும் சிறந்தது, அவருக்கு அவர்கள் கொடுக்கட்டும் அல்லது கொடுக்காமல் இருக்கட்டும் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

யாசகத் தொழில் புரிவதைப் பார்க்கினும் காட்டில் சென்று விறகு வெட்டி தலையில் சுமந்து கொண்டு வந்து கஷ்ட ஜீவனம் செய்வது மேல் என்பது இந்த ஹதீதின் கருத்து. தன்னுடைய உடலுழைப்பால் சம்பாதித்து உண்பதைப் பார்க்கினும் பரிசுத்தமான உணவு வேறில்லை என்று பெருமானார் (ஸல்) அவர்கள் உணர்த்திய ஹதீது, ஹராம்கள் பற்றிய விபரத்தில்மேலே எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, யாசகம் வாங்குவதைப் பார்க்கினும் மிகமிக கடினமான வேலை எதுவாயினும் செய்யலாம் என்பதுதான் ஹதீதின் சாரம். ஆதலால், தர்மம் கொடுப்பதை இஸ்லாம் ஆதரித்து உற்சாக மூட்டுகிறது. அதே சமயத்தில் யாசகம் வாங்குவதைக் கண்டிக்கிறது. இதிலிருந்து நாம் புரிந்து கொள்வதென்ன வெனில் நிர்ப்பந்தத்தால் சமயத்தில் வேறு வழி இல்லாவிடில் தற்காலிகமாக பிறரிடம் கையேந்துவது குற்றமல்ல. ஆனால், அதனை தொழிலாக ஏற்படுத்திக் கொள்வது கூடாது.

இவ்வுண்மையை முஸ்லிம்கள் நன்கு உணர்ந்தே இருந்தும் யாசகத் தொழிலுக்கு பயிற்சியளித்து ஊக்கமும் கொடுக்கின்றனர். இப்படிக் கூறுவதைக் குறித்து அவர்களுக்கு ஆச்சரியமும் எரிச்சலும் ஏற்படலாம். இதைப் பற்றிய விபரத்தை அறிந்தால் அவர்களுக்கு எரிச்சலோ ஆத்திரமோ ஆச்சரியமோ ஏற்படாது என்பது உறுதி. அதன் விபரம் வருமாறு:-



நமது நாட்டில் மஸ்ஜிதுகளுக்கு பஞ்சமில்லை மத்ரஸாக்களுக்கு கணக்கில்லை. இவைகளில் பணிபுரிய தக்கவர்களை நியமிக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு போதிய அளவுசம்பளம் கொடுப்பதில்லை. சம்பளம் போதாது என்று கூறினால், இது மத சேவை. மதக் கல்வியாளர்களாகிய நீங்கள் சம்பளம் கேட்கலாமா? அல்லாஹுதஆலாவிற்காக நீங்கள் மத சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். எங்களால் இயன்றதை சம்பளம் என்ற பெயரில் கொடுக்கிறோம் என்றுரைக்கின்றனர். ''அல்லாஹுதஆலாவிற்காக'' என்ற வார்த்தைகளைக்கூறியமாத்திரத்தில் ஆலிம்கள் அடங்கி ஒடுங்கி விடுகின்றனர். இந்த விதமான தந்திரம் செய்தாலும் கொடுக்கிற சம்பளம் போதாது என்பதை அவர்கள் தெரிந்திருப்பதால் கத்தம் பாத்திஹா, மௌலூது என்ற பெயர்களால் அரை-கால் ரூபாய்களைக் கொடுக்கின்றனர். பணக்கார வீட்டு கல்யாணங்களிலும் மௌத்திலும் சில ரூபாய்களை தானம் என்ற முறையில் கொடுக்கின்றனர். றமலான் மாதத்திலும், பெருநாளன்றும் ஸதக்கா-ஜக்காத் என்ற பெயரில் கொஞ்சம் கொடுக்கின்றனர். இந்த விதமாக ஜமா-அத்தார் பேஷ் இமாமுக்கும் மத்ரஸாவில் வேலை பார்க்கிற உஸ்தாதுமார்களுக்கும் தான, தர்மங்களை மேல் வரும்படி என்ற பெயரில் கொடுத்து யாசகம் வாங்குவதற்கு பயிற்சியளித்து விடுகின்றனர். மூன்று நான்கு வருடங்கள் பயிற்சி பெற்ற பின்னர் அவர்களுக்கு துணிச்சல் உண்டாகி விடுகிறது. பேஷ் இமாம் வேலையையும் மத்ரஸா உஸ்தாது வேலையையும் உதறித் தள்ளிவிட்டு முஸாபிராக ஊர்ஊராகச் சென்று தங்களுக்குத் தெரிந்த மட்டில் உபதேசம் செய்து விட்டு குமர் காரியங்களைச் சொல்லி உதவி கேட்கின்றனர். இதனைப் பார்க்கிற பொதுமக்கள் ஆலிம்கள் பிச்சை வாங்கத்'தான் ஓதுகின்றனர், மதக் கல்வி பயில்வது பிச்சை வாங்கத் தான் என்று தவறாக எண்ணிக் கொள்கின்றனர். இந்த நிலைமையைஉண்டுபண்ணியவர்கள்உண்மையில்மஸ்ஜிது மத்ரஸாக்களின் முத்தவல்லிகளும் நிர்வாகிகளுமேயாவர்.

மஸ்ஜிது மத்ரஸாக்களில் பணியாற்றுவது புனிதமான மத சேவை. இச்சேவையில் நியமிக்கப்படுபவர் கண்ணியமாக நடத்தப்பட்டால்தான் சுயமரியாதையுள்ள திறமையான மௌலவிகள் இந்தப் பனியில் ஸ்திரமாக இருந்து செயல்பட முடியும். இந்த நிலையை மௌலவிகள் உணர்ந்திருப்பதால் சுயமரியாதையும் திறமையும் தெய்வ பக்தியுமுள்ள மௌலவிகள் பேஷ்இமாம் வேலைக்கும், குர்-ஆன்மத்ரஸாவில்உஸ்தாதுவேலைக்கும்வருவதில்லை. சரிவரஓதாதவர்களும் ஆலிம்போல்உடையணிந்தவர்களும். பேணுதலற்றவர்களும் இந்த வேலைகளை ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களால் சமூகத்திற்கு நலம் விளைவதில்லை. இவர்களை முன்மாதிரியாக வைத்து எல்லா ஆலிம்களையும் சகட்டு மேனிக்கு பொதுமக்கள் கேவலமாக மதிக்கின்றனர். இந்த நிலையை மஸ்ஜிது மத்ரஸா முத்தவல்லிகள் நிர்வாகிகள் போன்றவர்கள் சிந்தித்து தக்க ஆலிம்களை திறமையுள்ளவர்களை மதாசாரங்களில் பேணுதல் உள்ளவர்களைப் பணியில் ஏற்படுத்தி கௌரவமான சம்பளங் கொடுத்தால் நாட்டுக்கும் சமூகத்திற்கும் நன்மை விளையும். இவ்வாறானவர்களை கண்டு கொள்வது எப்படி என்ற பிரச்சினை எழுகிறது. நம்நாட்டிலுள்ள தஹ்ஸீல் மத்ரஸாக்களுக்கு தகவல் தெரிவித்தால் தக்க அறிஞரை பேணுதல்காரரை அனுப்பி வைக்க முடியும். அதே இடத்திற்கு தகவல் கொடுக்கும் போது சம்பளம் இவ்வளவுதான் கொடுக்க முடியும் மேல் வரும்படி என்று தகவல் எழுதினால் அதற்கு தகுந்தவர்களைத்தான் மத்ரஸாக்களும் சிபாரிசு செய்யும். கத்தம் பாத்திஹா மௌலிது போன்றவைகளுக்கு வேறு நபர்களை நாங்கள் நியமித்துக் கொள்வோம். மஸ்ஜிது மத்ரஸா பணிகளை திறமையாகச் செய்யக் கூடியவர்களை அனுப்புங்கள் சம்பளம் என்னவென்பதை நீங்களே நிர்ணயம் செய்து கொள்ளுங்கள் என்று தஹ்ஸீல் மத்ரஸா நிர்வாகிகளிடம் பொறுப்பை ஒப்புவித்தால் அவர்கள் திறமையானவர்களை சுயமரியாதைக்காரர்களை பேணுதலுள்ளவர்களை இன்ஷா-அல்லாஹுதஆலா அனுப்பி வைப்பர்.



தவிர, நமது நாட்டில் இந்த நிலையுண்டாகுவதற்கு முக்கிய காரணம் மஸ்ஜிது மத்ரஸாவுக்கு தகுதியற்றவர்கள் முத்தவல்லிகளாகவும் நிர்வாகிகளாகவும் நியமிக்கப்படுவதும் ஒன்று. ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றுவதுடன் பேணுதல் உள்ளவர்களாகவும், தொழுகை நோன்பு போன்ற அடிப்படை கடமைகள் பற்றிய சட்டதிட்டங்களை அறிந்திருப்பவர்கள் மஸ்ஜிது நிர்வாகியாகவோ முத்தவல்லியாகவோ இருந்து, பெரும்பாலும் மஸ்ஜிதுக்கு வந்து இமாம் ஜமா-அத்துடன் தொழுபவராக இருந்தால் பேஷ் இமாமும் பொறுப்புடன் நடந்து கொள்வார். மஸ்ஜிதிலுள்ள குறை நிறைகளையும் நேரில் புரிந்து தக்கது செய்ய முடியும். அவ்வாறின்றி மத அறிவுக்கும் மத பண்பாட்டிற்கும் வெகுதூரத்திற்கப்பால் இருப்பவர்களை அவர்கள் செல்வந்தர் என்பதற்காகவோ செல்வாக்குள்ளவர் என்பதற்காகவோ நியமித்தால் எல்லாம் தலைகீழாக மாறிவிடும். பேஷ் இமாம் முத்தவல்லி வீட்டுப் பணியாளர்களில் ஒருவராக மதிக்கப்பட்டு குற்றவேல்கள் புரியும்படி செய்யப்பட்டால் நல்லவர் சந்தடி இல்லாமல் ஒதுங்கி விடுவார். இது போலவே குர்-ஆன் மத்ரஸாக்களுக்கு முத்தவல்லிகளாக நியமிக்கப்படுபவர்களின் நிலையும். இது மதக் கல்வி ஸ்தாபனம். ஆலிமாக இல்லாவிடினும் மதக் கல்வியை நன்கு பயின்றவர்கள் முத்தவல்லிகளாக நியமிக்கப்பட்டு, பொதுஜனங்களுக்கு மதக் கல்வியும் மத பக்தியும் உண்டாக வேண்டும் என்ற அக்கறையும் பண்பாடும் உள்ளவராக இருப்பின் அடிக்கடி மத்ரஸாவிற்கு செல்லவும் உஸ்தாதுமார்களின் பணியை கண்காணிக்கவும், ஓதுகிற பிள்ளைகளின் தேர்ச்சியை உணரவும் இயலும். அவ்வாறின்றி மதக் கல்வி, மதப் பண்பாடு, மத பக்தி இல்லாதவர்களை மத்ரஸா நிர்வாகியாக நியமித்தால் நேர்மாறான பலனைத்தான் காண முடியும்.

மேலே எழுதப்பட்ட தர்மம், ஜக்காத்துக்கும் பித்ரு ஸதக்காவிற்கும் சம்பந்தப்பட்டதல்ல. பித்ரு ஸதக்கா, ஜக்காத்து வாங்குவதற்கு உரியவர் யாவர்? அவர்களுக்கு

எந்த அளவு கொடுக்க வேண்டும் என்ற விபரம் பிக்ஹு சட்ட நூல்களில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. அதனைப்பார்த்து புரிந்து கொள்வதவசியம். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறை தவறித் தகுதியற்றவர்களுக்கு ஜக்காத்தையும் பித்ரு ஸதக்காவையும் கொடுத்தால் அவை செல்லா. கடமை நிறைவேறாது.

இக்காலத்து பெரும்பாலான செல்வந்தர்கள் இச்சட்ட விதிகளைப் படித்து புரிந்து கொள்வதுமில்லை. உரியவர்களுக்கு அவைகளை பகிர்ந்தளிப்பதுமில்லை. தர்மக் கணக்கு என்றுபட்டியலை ஏற்படுத்தி அவர்கள் மனப்போக்கில் தர்மம் செய்து விட்டு ஜக்காத்து கொடுத்து விட்டதாக நினைத்துக் கொள்கின்றனர். சிலர் றமலான் மாதத்தில் சில நூறு ரூபாய்களை சில்லறையாக மாற்றி பெருங் கூட்டம் போட்டு புள்ளிக்கு கால், அரை என்று கொடுத்து விட்டு தங்கள் கடமையை நிறைவேற்றி முடித்ததாக எண்ணிக் கொள்கின்றனர். இப்படிச் செய்வதும் தர்மம் தான். எனினும், இது இறைவனால் அங்கீகரிக்கப்படுமா இதனால் மறுமைப் பயன் கிடைக்குமா என்பது சிந்திக்கதக்க விஷயம். தர்ம சிந்தையுள்ள செல்வந்தர்களை நாம் கண்டிக்கிறோம் என்று கொள்ளலாகாது. அவர்கள் சரியான முறையில், கடமை நீங்கும் விதத்தில் ஜக்காத்து. ஸதக்கா ஏனைய தர்மங்களைக் கொடுத்து மறுமையில் நற்பயன் அடைய வேண்டும் என்பதற்கே இவ்விபரங்களை இங்கு குறிப்பிட்டோம். றஹ்மான் நம்மவரின் தானதர்மங்களை அங்கீகரித்து இம்மை மறுமைப் பயன்களை தந்தருளுவானாக ஆமீன்.

## மதுபானம்

**கால்-தஆலா யா அய்யுஹல்லதீன ஆமனூ இன்னமல் கம்ரு வல்மைஸரு வல்அன்சாபு வல் அஜ்லாமு ரிஜ்ஸும் மின அமலிஷ்ஷைத்தானி பஜ்தனிபூஹு ல அல்லகும் துப்லிஹூன். இன்னமா**



**யுரீதுஷ்ஷைத்தானு அய்யூக பைனகுமுல் அதாவத வல்பக்லாஅ பில்கம்ரி வல்மைஸரிவ யஷுத்துகும் அன் திக்ரில்லாஹி வஅனிஸ்ஸலாதி பஹல் அன்தும் முன்தஹூன்**

மது, சூது, கட்டையுருட்டுதல்,சத்ரஞ்சு ஆகியவை பாப மானவை. ஷைத்தானின் கிரியைகளிலுள்ளவை. நீங்கள் வெற்றியடையும் பொருட்டு இதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மதுவிலும் சூதிலும் உங்களுக்கிடையில் பகையையும், கோபத்தையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் ஞாபகத்தையும், தொழுகையையும் விட்டு உங்களைத் தடுப்பதற்கும்தான் ஷைத்தான் நாடுகிறான். ஆதலின், நீங்கள் விலகிக் கொள்வீர்களா? என்று (அதனை விட்டு) அல்லாஹுதஆலாதனது திருமறையில கூறியுள்ளான்.

**காலஸல்-அம் லாயஜ்னிஜ்ஜானி ஹீனயஜ்னி வஹுவ முஃமினுன் வலா யஸ்ரிகுஸ்ஸாரிகுஹீன யஸ்ரிகு வஹுவமுஃமினுன்வலாயஷ்ரிபுஸ்ஸாரிபு ஹீன யஸ்ரிபு வஹுவ முஃமினுன்**

''வியசாரம் செய்பவன் வியபிசாரம் செய்யும் சமயத்தில் மூமினாக இருந்து கொண்டு வியபிசாரம் செய்யமாட்டான். திருடன் அவன் திருடும் சமயத்தில் அவன் மூமினாக இருந்து கொண்டு திருட மாட்டான். குடிகாரன் அவன் குடிக்கும் போது மூமினாக இருந்து கொண்டு குடிக்க மாட்டான்'' என்று றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

மது பானம் அருந்துதல், சூதாடல், குச்சிகளை நட்டு வைத்துக்குறிபார்த்தல்கட்டைகளையுருட்டிக் குறிபார்த்தல் ஆகியவை ஷைத்தான் செய்கிற காரியங்களைச் சேர்ந்த பாபக் கிரியைகள். இதனைச் செய்வோர் இம்மை மறுமை இரண்டிலும் வெற்றி பெறுவதில்லை. மது சூது ஆகியவை மூலமாக மனிதருக்குள் பகையையும் கோபத்தையும் உண்டு

பண்ணி மனித வர்க்கத்தில் அமைதியும் சமாதானமும் ஏற்படவிடாமலும் தொழ விடாமலும் தடை செய்ய ஷைத்தான் நாடுகிறான். அவைகளை நீங்கள் விலக்கி விட வேண்டும் என்பது திருகுர்ஆனின் மேற்கண்ட வசனங்களின் கருத்து.

வியபிசாரம் செய்பவர் திருடுபவர் மதுபானம் அருந்துபவர் ஆகிய மூன்று வர்க்கத்தார் மூமினாக இருக்கையில் இத்தொழிலைச் செய்ய மாட்டார்கள். மூமினாக இருப்பவர் இத்தொழில்களில்எதையேனும்செய்யும் போது அவருடைய ஈமான் என்னும் தெய்வ விசுவாசம் அவரைவிட்டு அகன்று விடுகிறது என்பது மேற்கண்ட ஹதீதின் கருத்து.

நிரந்தரமாக மது அருந்துபவர் மரித்தால் உருவ வழிபாட்டுக்காட்டுக்காரரைப்போல் அல்லாஹ்வைச் சந்திப்பார் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

மதுவை ஒதுக்கிவிடுங்கள். அதுசகல கெடுதல்களுக்கும் திறவுகோல் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்,

மூவர் சுவர்க்கத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். நிரந்தரமாக மது அருந்துபவர், பந்தத்துவத்தை முறிப்பவர் சூனியத்தை நம்புபவர் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

பந்தத்துவத்தை முறிப்பவர் பற்றி மேலே எழுதப்பட்டிருக்கிறது. மது அருந்துபவர் பற்றிய விபரம் இங்கு கூறப்படுகிறது. இவ்விரண்டையும் அல்லாமல் சூனியத்தை நம்புபவர் என்று இந்த ஹதீதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனைக் குறித்து சுருக்கமாக விளக்குவோம்.

சூனியத் தொழில்என்று ஒருவகை வஞ்சனைத் தொழில் பெருமானார் (ஸல்) அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னரும் இருந்தது. ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அற்புத நிகழ்ச்சிகளை இது வெறும் மந்திர



வித்தைதான். இதனால் இறைவனை விசுவாசிக்க முடியாது என்று பிர்ஔன் கூறி தன் நாட்டிலுள்ள சூனியக்காரர்களை வரவழைத்து ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் போட்டிக்கு விட்டதும் அவர்கள் யாவரும் தோல்வியடைந்து ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பணிந்து விசுவாசம் கொண்டதுமாகிய விபரங்கள் திருகுர்ஆனில் விபரமாக கூறப்பட்டிருக்கின்றன. பெருமானார் (ஸல்) அவர்களை அக்காலத்து இஸ்லாம் மத விரோதிகள் சூனியக்காரர் என்று கூறிய விபரமும் திருகுர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், பல்லாயிக்கணக்கான வருடங்களாக உலகமக்கள் அறிந்தும் தெரிந்துமுள்ள ஒரு தொழில்தான் சூனியம். ஆதலால், சூனியத்தை நம்புபவர் என்பதற்கு சூனியம்என்றஒருவித்தை இருக்கிறது என்பதை அறிந்திருப்பதை இந்த ஹதீது குறிப்பிடவில்லை. சூனியத்தையைக் கற்றுக் கொள்பவரையுங்கூட இந்த ஹதீது குறிப்பிடவில்லை. சூனியத்தைக் கற்று அதனை தொழிலாகக் கொண்டிருப்பவரையும் அதனைச் செய்விப்பவரையும்தான் குறிக்கும். ஆகவே, சூனியத் தொழில் புரிபவரும், பிறருக்கு சூனியம் செய்யும்படி செய்பவரும் சுவர்க்கம் புகார் என்று கொள்க.

மது அருந்துபவரின் உள்ளத்திலிருந்து ஈமானின் ஒளி வெளியேறிவிடும் என்று அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்,

மதுவை அருந்தலாகாது. அது கெடுதல் செய்யும் என்பதைக் குறித்து ஏராளமான ஹதீதுகள் இருக்கின்றன. மதுவை எந்த மதமும் போற்றவில்லை. மனிதத்துவமுள்ள எந்த மனிதரும் ஆதரிக்கவில்லை. உலகம் முழுவதும் இதே நிலைதான். எனினும் உலகாதாய சர்க்கார் என்று கூறிக் கொள்ளும் எந்த அரசாங்கமும் இதனைச் சட்டத்தின் மூலம் தடை செய்யவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்திலும் குலபாயே ராஷிதீன்கள் காலத்திலும் செயல்படுத்தப்பட்ட இஸ்லாமிய அரசாங்கம் ஒன்றுதான் சட்டத்-

தின் மூலம் இதனைத் தடுத்து மது அருந்தியவரைத் தண்டித்தது. முதன்முதலில் இஸ்லாம் மதம் இதனை பலமாக கண்டித்ததால் ஆரம்ப கால முஸ்லிம்கள் மதுபானமருந்துவதை அடியுடன் நிறுத்தி விட்டனர். பின்னர், காலக் கிரமத்தில் முஸ்லிம் அல்லாதாரின் பழக்க வழக்கங்கள் முஸ்லிம்களுக்குள் பிரவேசித்ததை ஒட்டி இடைக் காலத்தில் சில முஸ்லிம்கள் ஒளிவு மறைவாக இப்பழக்கத்தை கையாண்டனர்.

நமது இந்திய நாட்டில் சுதந்திரம் வந்து காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிற்று. அக்கட்சி பதவி வருவதற்கு முன்னர் மது விலக்கு பிரசாரம் செய்ததுடன் கள்ளுக்கடை மறியலும் செய்தது. ஆயினும், பதவிக்கு வந்ததும் மது விலக்கை சட்டப் பூர்வமாக தடை செய்யாமல் மாகாண சர்க்கார்களின் அதிகாரத்தில் இப்பிரச்சினையை மத்திய சர்க்கார் விட்டுவிட்டு ஒதுங்கிற்று. காங்கிரஸ் கட்சியின் அதிகாரத்தின் கீழுள்ள மாகாண சர்க்கார்களில் சில மது விலக்கை படிப்படியாக அமல் செய்து ராஜ்ய முழுவதிலும் அமலில் கொண்டுவந்தனவாயினும், மக்களிடம் மது விலக்கு உணர்ச்சி மட்டுப்படாமல் கள்ளச் சாராயம் காய்ச்சும் பணி பெருகியது. ஆதலால், மது விலக்கு வெற்றி பெறவில்லை. இறுதியாக மது விலக்கை அமல் செய்த காங்கிரஸ் சர்க்கார்களும்கூட, மது விலக்கை விட்டு மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறந்து விட்டன. இந்த நிலைக்குக் காரணம் மக்களின் மனத்தை மாற்றாமல் சட்டத்தின் மூலம் அமல் செய்ததேயாகும். மதுவினால் ஏற்படும் தீமைகள் போதியளவு உணர்த்தப்பட வில்லை. ஆதலால், மக்கள் கள்ளச் சாரயங்களைக் காய்ச்சி பல்வேறு பெயர்களால் கடைத்தெருவில் விற்பனைக்குக் கொண்டுவந்து விட்டனர். இதனைத் தடுக்க சட்டம் இயற்றப்படவில்லையாதலால் மதுவிலக்கை கைவிடும் நிலைமை ஏற்பட்டு விட்டது. முஸ்லிம்களும் இதில் விதிவிலக்கில்லை. முன்பெல்லாம் சமூகக் கட்டுப்பாட்டிற்கு பயந்து ஒதுங்கி இருந்த முஸ்லிம்கள், இலைமறை காய்மறையாக மதுவருந்திய



முஸ்லிம்கள் இப்பொழுது பகிரங்கமாக அருந்தத் தொடங்கினர். இவர்களைப் பார்த்து வேறு பலரும் அருந்துகின்றனர். ஆகவே, சுதந்திரத்திற்கு முன்னர் முஸ்லிம்களில் அபூர்வமாக இருந்த இக்கெட்ட பழக்கம் சுதந்திரத்திற்குப் பிறகு அதிகமாகப் பெருகிவிட்டது. இதனைக் குறித்து ஸ்தல பிரமுகர்கள் கவனஞ் செலுத்தி இஸ்லாமிய பண்பாட்டுக்கு விரோதமான குடிப் பழக்கத்தை ஒழிக்க முயலுவதவசியம்.

ஹிஜ்ரீ 5-ம் வருஷத்தில் பஹ்றைனிலிருந்து அப்துல்கைஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களில் பதின்மூவர் தங்கள் கோத்திரத்தின் சார்பாக தூது வந்தனர். அவர்களில் ஒருவர் குடிபோதையில் தன் சித்தப்பாவை கொலை செய்தவர். இவர்கள் றஸூலுல்லாஹிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை சந்தித்து இஸ்லாம் மதத்தை தழுவி தங்கள் சமூகத்தாரிடம் இஸ்லாம் மதப் பிரச்சாரம் செய்ய அனுமதி பெற்று திரும்பச் செல்கையில் தங்களுக்கு வஸிய்யத்துச் செய்யும்படி கேட்டுக் கொண்டனர். அக்காலத்து அறபியர் நான்கு வகை மதுவை நான்கு வகை பாத்திரங்களில் தயார் செய்வது வழக்கம். பெருமானார் (ஸல்) அவர்கள் வஸியத்துச் செய்தபோது அந்த நான்கு வகைப் பாத்திரங்களையும் குறிப்பிட்டு மதுபானம் அருந்தலாகாது என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அந்த பாத்திரத்தின் பெயர்தான் தெரியும். அதிலிருந்து தயார் செய்யப்படும் மது தெரியாதென்ற எண்ணத்தில் அப்பாத்திரங்கள் யாவை என்று அத்தூதர்கள் வினவினர். பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பாத்திரங்களையும் அவைகள் மூலமாக மது தயாரிக்கும் முறைகளையும் விளக்கமாகக் கூறி இவைகளை மனிதன் அருந்தி போதையடைந்து தன் சித்தப்பாவையுங் கூட கொலை செய்து விடுவான் என்றும் கூறினார்கள். தன் சித்தப்பாவைக் கொலை செய்த அந்த நபர் வெட்கி தலைகுனிந்தார். ஆகவே, போதையுள்ள வஸ்து எந்த

வகையில் தயார் செய்தாலும் அதற்கு எந்தப் பெயர் இருந்-தாலும் சன்மார்க்க இஸ்லாமில் தடுக்கப்பட்டிருக்கிறது. இந்திய சர்க்கார் மதுவை விலக்கினாலும் சரி விலக்கா விடினும் சரி, முஸ்லிம்களுக்கு அவர்களுடைய மதம் தடை செய்வதால் அவர்கள் மதுவிலக்குச் செய்வது அவசியம்.

இப்பொழுது நமது நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் சர்க்கார் மதுவிலக்கை செயல்படுத்துகிறது.O பக்கத்து ராஜ்-யங்களான புதுவையிலும் கேரளத்திலும் மதுவிலக்கு இல்லை. ஆதலால்தமிழகத்திலுள்ளவர்கள் அந்த ராஜ்யங்-களுக்குச் சென்று மது அருந்துகின்றனர். மதுவைக் கடத்தி தமிழகத்துக்குக் கொண்டு வருகின்றனர், கள்ளச் சாரயங் காய்ச்சுகின்றனர். போதைப் பொருளை ஷர்பத் என்ற பெயரால் புட்டிகளில் அடைத்து பகிரங்கமாக விற்பனை செய்கின்றனர். இந்தக்காரியங்களை முஸ்லிம் அல்லாதார் மட்டிலும் செய்யவில்லை. முஸ்லிம்களும் செய்கின்றனர். இவர்களுக்கு சட்டமியற்றி சட்டத்தின் மூலம் குடிப்பழக்-கத்தை நிறுத்த அரசாங்கம் துணிந்திருப்பது பாராட்டத் தக்கதே யாயினும் பிரசாரத்தின் மூலம் மத உபதேசத்தின் மூலம் மக்களின் மனதை மாற்றினால்தான் இக்கெட்ட பழக் கத்தை வெற்றிகரமாக நிறுத்த முடியும். மனமாற்றம் செய்-யாமல் நிறுத்த முயல்வதில் தற்காலிக வெற்றிதான் கிடைக்-கும் நிரந்தரமான வெற்றி கிடைப்பது அரிது.

---

O தற்போது இந்தியாவில் குஜராத்தவிர வேறு எங்கும் மதுவிலக்கு அமலில் இல்லை. கடந்த 17—10—95 அன்று கூது விஷச் சாரயத்திற்கு தமிழகத்தில் 25 பேர் பலியானர் கள் என்பது அனைவரும் அறிந்ததே

(பதிப்பாசிரியர்)



முஸ்லிம் சமூகத்திலுள்ள நல்லவர்கள் மத சமூக அபி-மானிகள் தங்களிலுள்ள பொது ஸ்தாபனங்கள் மூலமாகவும் நேரிலும் சிரத்தை எடுத்துக் கொள்வது நாட்டுக்கும் சமூகத்துக்கும் மதத்துக்கும் தொண்டு செய்வதாக ஏற்படும். இதனால் முஸ்லிம் சமூகத்தின் பால் ஸ்தல அரசாங்கத்திற்கு நல்லெண்ண மேற்படும். எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலாவின் திருப்தியும் கிருபையும் கிடைக்கும்.

இக்காரியம் வெற்றி பெறுமா தோல்வியுறுமா என்பதை நாம் சிந்திக்க வேண்டியதில்லை. வெற்றி தோல்வி எது கிடைத்தாலும் ஸ்தல அரசாங்கத்தின் நல்ல எண்ணமும் சிருஷ்டி கர்த்தனான ஹக்குஸுப்ஹானஹு வதஆலாவின் திருப்தியும் கிடைப்பது உறுதி. எல்லாம் வல்ல றஹ்-மான் மனுக்குலத்தின் பண்பாடு சிறக்க நல்லுதவி செய்-தருள் புரிவானாக ஆமீன்.